
பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
அக்டோபர் 2017



## மகளிருக்கு மட்டும் தானா?

பெண்ணியம் செல்வகுமாரி





## நமக்காக!!

அருணா செல்வம்

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
தோற்றம் 1972

அக்டோபர் 2017

ஆசிரியர் / வெளியிடுபவர் :
அமின் மொஹமெட்

இணையாசிரியர் :
சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :
ஹிப்ஸுர் ரஹ்மான்
சத்தியபாமா சந்திரன்
அழகுநிலா
சு.பீர்முகமது
ஓவியக்கவிஞர் உமாபதி
"நம் குடும்பம்" ஆ. வர்க்கீஸ்
நெல்லை உலகம்மாள்
வசந்தி ஆதித்தன்
கவிஞர் அ.முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
கவிதாயினி செந்தாமரைக்கொடி
கவிஞர் கலந்தர் பூமதீன்
கவிஞர் பாலமுனை பாறூக்

ஆலோசகர்கள் :
"பைந்தமிழரசு" பாவலர் மா. வரதராசன்
கவிதாயினி சக்தி ஜோதி
கவிதாயினி அமுதா பொற்கொடி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

TAMILNENJAM
59, rue des Entrechats
95800 Cergy - France

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

**புதிய வெளியீடு...**




**தேவைக்கு தொடர்புக்கொள்ளவும்.**



# கடலோரத் தென்னை மரம்

(எண்சீர் விருத்தம்)

கண்ணாடிப் போலந்த கலங்காத நீர்மேல்
  களிப்போடு முகம்பார்க்க காலடியில் நீரை!
தண்ணீரின் அழகில்நீ தடுமாறிப் போவாய்
  தன்னிழகை ஒத்தவளை தலைவணங்க வாராய்!
வெண்மேகம் உருவாக உன்பங்கும் உண்டோ
  வெள்ளியெனத் துள்ளிவரும் வான்துளியின் தாய்;யார்?
மண்மீது தவழ்ந்தாடும் மலைக்காற்றும் சேரும்
  மனங்குளிரத் தென்றலுனைத் தாலாட்டிப் பாடும்!

பச்சைநிறக் கீற்றாகி பால்நிறைந்த தென்னை
  பருவத்தே தான்வளர்ந்து பளிச்சிடுவாய் கண்ணில்!
இச்சையை,நீ காட்டாமல் இளயவளாய் என்றும்
  இசைப்பாடும் அலையாலே இன்புற்றாய் நின்று!
எச்சமுமிழ் காகங்கள் இளைப்பாறும் உன்னில்
  இதமாக்கும் குளிர்வாடை உன்னருகே நிற்க!
உச்சிவெயில் வாட்டாது உன்னழகைப் பார்க்க
  உனைத்தேடி வருவோரக்கு உடன்தருவாய் மென்னீர்!

கரையாடும் கடல்நீருன் காலடியில் பாங்காய்,
  கலக்காமல் தருகின்றாய் கனிவானத் தேங்காய்!
நுரைப்போலே பால்வெண்மை நுழைக்கின்றாய் நீரில் !
  நுழைவாயில் அடைக்கின்றாய் நுண்ணுயிரை வைத்தே!
அறைக்குள்ளே வைக்கின்றாய் அருமருந்தைக் கொண்டு
  அமுதாகும் பலருக்கு அரும்பசியைப் போக்கி!
பறைசாற்றும் படியான பயன்பாடு நூறாம்
  படைகொண்டுப் போனாலும் பஞ்சுமெத்தை யாவாய்!

வெள்ளைமணல் வருடிவிட கைவிரலும் மோதும்
  வெளிவானம் நீலநிறம் வெண்திட்டு மேகம்!
துள்ளுமென்தன் மனதோடு உறவாடும் தென்றல்
  தூரிகையாய் கீற்றசைய துயரதுவும் நீங்கும்!
அள்ளியெடுத்து அரவணைக்க அமுதாய்நீர் முன்னே
  அழகென்றால் கண்டுமகிழ அமைந்தனரோ உப்பாய்!
கொள்ளைபோகும் மனமிங்கு கொஞ்சிவிளை யாடும்
  குதிரையாகத் தாவியோடும் குரங்கினத்தைப் போலே!



பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி
சிங்கப்பூர்



அருணா செல்வம்

# நமக்காக!!

“என்னங்க...“

மாதவி கெஞ்சளானக் குரலில் கணவனை அழைத்தாள். சாப்பிட்டுக் கொண்டிருந்த மனோகரன் நிமிர்ந்து “என்ன“ என்பது போல் பார்த்தான்.

“ஒன்னுமில்லை.... நம்ம பிள்ளைகளுக்கு எக்ஸாம் எல்லாம் முடிஞ்சிடுச்சி. இந்த லீவுல ஊட்டி கொடைக்கானல்ன்னு எங்கேயாவது அழைச்சிக்கினு போங்கன்னு ஆசையா கேக்குதுங்க...“

அவன் அவள் சொன்னதைக் காதில் வாங்காதது போல் பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

“ஏங்க... நான் சொன்னது காதுல விழுந்துச்சா?“

“ம்“

“அப்போ நான் பசங்ககிட்ட அப்பா போக சம்மதிச்சிட்டாருன்னு சொல்லிடட்டுமா...?“ ஆவலுடன் கேட்டாள்.

“அதெல்லாம் எதையும் சொல்ல வேணாம். நாம் எங்கேயும் போக முடியாது.“

“ஏங்க...“ என்றாள் ஏமாற்றமாக.

“என்ன மாதவி, புரிஞ்சிக்காமல் பேசுறே. இப்போ தான் ராதா கல்யாணக் கடனே முடிஞ்சது. இன்னும் ஒரு வருஷத்துல மஞ்சு பெரியவளாயிடுவா. அவளுக்குச் சடங்கு செய்ய நாலு காசு வேண்டாமா? இப்போதிலிருந்தே கொஞ்சம் கொஞ்சமா சேர்த்தால் தானே அந்த நேரத்துல உதவும். அதை விட்டுட்டு ஊட்டி சுற்றுலான்னு செலவு செய்ய சொல்லுறியே....“ என்றான் கடுப்பாக முகத்தை வைத்துக்கொண்டு.

“பிள்ளைங்க ஆசைப்படுதுங்க.... எனக்கும் ஆசையா இருக்குதுங்க.... போயிட்டு வர.....

அவள் சொல்லி முடிப்பதற்குள் சாப்பாட்டை முடிக்காமலேயே எழுந்து, ”சே. மனுசன் நிம்மதியா சாப்பிட கூட முடியலை...” என்று முணுமுணுத்தபடியே கையலம்ப போய்விட்டான்.

மாதவி மற்ற வேலைகளைச் செய்துக் கொண்டிருந்த போது மஞ்சு வந்து கேட்டாள். “அம்மா... அப்பா என்னம்மா சொன்னாரு....?“

அவள் பதிலெதுவும் சொல்லாமலேயே இருந்ததைப் பார்த்து, அப்பா வேண்டாம் என்று

சொல்லியிருப்பார் என்பதைப் புரிந்துகொண்டு அங்கிருந்து கவலையாகப் படுக்கச் சென்றாள்.

மஞ்சு போனதைப் பார்த்த போது அவளும் சிறு வயதில் அம்மாவிடம் கேட்டது ஞாபகத்துக்கு வந்தது. அன்றும் இப்படி தான்.

மாதவி பள்ளிக்குப் போய்விட்டு வந்து அவள் அம்மாவிடம் கேட்டாள். “அம்மா என் ஃபிரென்ஸ் எல்லாம் இந்த லீவுல நிறைய ஊருக்கெல்லாம் போயிட்டு வந்தாங்களாம். என்னையும் எங்கேயாவது அழைச்சிக்கினு போங்கம்மா....“

அவள் அம்மாவும் மகளின் ஆசையை தன் கணவனிடம் தெரிவித்தாள். அவரும் “இன்னும் வீடு கட்டிய கடனே அடையலை. ரெண்டு பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணணும். பெரியவனைப் படிக்க வைக்கனும். இதையெல்லாம் நினைக்காம ஊர் சுத்தலாம்ன்னு சொல்லுறீயே....“ என்றார்.

“பிள்ளைங்க ஆசைப்படுதுங்க. அதுங்க ஆசையை நாம தானே நிறைவேத்தனும்...“

அம்மா பிடிவாதமாகச் சொல்லிப் பார்த்தாள். ஆனால் அப்பாவின் முடிவு தான் முடிவானது. “நாம நல்லபடியா பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்து வைப்போம். அது தான் நம்முடைய கடமை. கல்யாணம் ஆன பிறகு புருஷனோட சந்தோஷமா போயிட்டு வர போவுதுங்க....“ என்று முடித்து விட்டார்.

அப்பா சொன்னது போல நல்லபடியாகத் தான் கல்யாணம் முடிந்தது. ஆனால் ஊட்டிக்குப் போகனும் என்ற ஆசை தான் இது வரையில் மாதவிக்கு நிறைவேறவே இல்லை.

கல்யாணம் ஆன புதியதில் கணவரிடம் தன் ஆசையைச் சொன்னாள் தான். ஆனால் உறவினர்கள் வைத்த கல்யாண விருந்து முடிவதற்குள்ளேயே கர்ப்பமாகி விட்டாள். குழந்தையைச் சுமந்து கொண்டு ஊர் சுற்றக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள்.

குழந்தை பிறந்தவுடன் பச்சை உடம்பு.

# பாரியன்பன்
## கவிதை

பசியால் மரித்தவனின் உடல்
நிலமகிழ்ந்து புதைக்கப்பட்ட
மயான மண்மேட்டில்
விதையொன்று முளைக்க
தலைநீட்டுகிறது தளிர்.
பருவநிலை பரிணாமத்தில்
வெருன்றிய செடி மரமாக
மரத்தின் நிழலில் மகிழ்வாய்
திளைத்திருக்க திராணியற்ற
புதைபிணம்
பசியால் வேயப்பட்ட பிரபஞ்சத்தின்
அகன்ற வெளியினூடே
மௌனத்தை உடைத்த நிலையில்
இப்போதும்
அகோரப் பசியோடிருக்கிறது.
கருணை மனதோடு காற்றும்
பந்தபிணைப்போடு பறவைகளும்
பல பழங்களை ஈந்தப் பிறகும்
தீரவில்லை புதைபிணத்தின்
பசிமயக்கம்.
பூமியறைக்குள்
உறைந்து கொண்டிருக்கும்
பசிசாயை கொண்ட பிணம்
அதன் பிணப்பசி தீர
நிர்ப்பந்தத்தின் பீடியில்
தீரா பெருவேட்டையாய் மரத்தின்
வேர்களைக் கரையான்களாய்
அரித்து
உண்ணத் தொடங்குகிறது.
வேர் செத்த மரம்
வீசுமொரு பெருங்காற்றில்
பிணத்தின் புலம்பலை
அலறலுடன் மொழிபெயர்த்து
மொத்தமாய் சாய
பசிவெக்கைக் கொண்ட
புதைபிணத்தின் மண்மேட்டில்
தன்மரிப்புக்குத் தயாராகி
முளைவிட்டுக் கொண்டிருக்கிறது
வீழ்ந்த மரத்தின் விதைகள் பல.

– உணர்வும் ஆக்கமும் பாரியன்பன்

கைப்பிள்ளைகாரி என்ற காரணங்கள். குழந்தை கொஞ்சம் வளர்ந்ததும் நாத்தனார் கல்யாண கடன். கடனை அடைப்பதற்குள் இரண்டாவது குழந்தை. இதோ பத்து வருடம் ஓடிவிட்டது.

இப்போதாவது அவளது ஆசை நிறைவேறும் என்று நினைத்தால் அதுவும் முடியவில்லை.

மாதவிக்கு கோபமாக வந்தது. எழுந்து போய் கட்டிலில் குப்புற படுத்தாள். ஆத்திரம் அழுகையாக வந்தது. இல்லை. அவளுடைய இயலாமை தான் அழுகையாக மாறியது.

எவ்வளவு நேரம் அழுதாளோ தெரியாது! கணவனின் கை மேலே பட்டு அவளைத் தன் பக்கமாக இழுக்கும் போது தான் தூக்கம் களைந்தது. சற்று நேரம் அழுத்தில் கோபம் அடங்கி இருந்தது. மனதும் யோசித்திருந்தது.

ஆசையாக அணைத்த கணவனின் அருகில் நெருக்கமாகப் படுத்தாள்.

“என்னங்க... நான் ஒன்னு கேட்பேன். பதில் சொல்லுறீங்களா...?“

“என்ன திரும்பவும் ஊட்டிக்குப் போவதைப் பத்தியா..?“

“இல்லை. நம்மை பற்றி நாமே பேசிக்கனும்.“

“என்ன பேசிக்கனும்...?“

“கல்யாணமாச்சி. குழந்தை பெத்தோம். ராதாவுக்கு கல்யாணமாச்சி. கடன் வாங்கினோம். அதை அடைச்சோம். அடுத்து மஞ்சுவுக்குச் சடங்கு செய்யனும். அப்புறம் கல்யாணம் பண்ணி வைக்கனும். சின்னவனைப் படிக்க வைக்கனும். இதுக்கெல்லாம் பணம் வேணும். அதுக்காகச் சம்பாதிக்கனும். இதெல்லாம் நம்ம கடமை. இதை நாம செஞ் சித்தான் ஆகனும். ஆனால் நமக்குன்னு ஒரு சந்தோஷம் கூட தேவையில்லையா? வெறும் கடமைக்காக வாழுற வாழ்க்கை சந்தோஷம் தானா... அப்படின்னா நாம வாழுற வாழ்க்கை ஒரு சன்னியாசி வாழ்க்கையா? ஒரு நல்ல துணி வாங்கி கட்டிப்பார்க்க முடியலை. நகை வாங்கி போட்டுப் பார்க்க முடியலை. ஆசையா சந்தோஷமா ஒரு ஊர் சுற்றிப் பார்க்க முடியலை..

வெறும் கடமைக்காக வாழுறதுல எனக்கு சந்தோஷமா தெரியலைங்க. ஓரளவிற்காவது சந்தோஷங்களை அனுபவிக்கனும். வயசானப்பிறகு கடமையெல்லாம் முடிஞ்சபிறகு அனுபவிக்கிறது சுகம்ன்னு நினைக்கிறீங்களா...? அது சுகமில்லைங்க. ஏதோ பழைய ஆசையை நிறைவேத்திக் கொண்டோம் என்ற திருப்தி மட்டும் தான் இருக்கும். அப்படிப் பார்த்தால் அதுவும் ஒரு கடமை தாங்க.

அதனால நாமும் நமக்காக வாழ்ந்து பார்ப்போம்ங்க. இதுல நமக்கு ஓரளவுக்கு பணம் நஷ்டமானாலும் மனம் சந்தோசத்தை அனுபவிக்கும் இல்லையா... என்ன நான் சொல்லறது...?“

கணவனை அந்த மெல்லிய வெளிச்சத்தில் பார்த்தாள். அவன் யோசித்ததில் ஒரு நீண்ட பெருமூச்சு வெளிவந்தது.

“நீ சொல்லுறதும் உண்மை தான். நமக்காக நாம வாழனும் தான். இந்த லீவுல போய் வரலாம்“ என்றான்.

மாதவி மன நிறைவுடன் கணவனைப் பார்த்தாள்.

“ஆனால் மாதவி....“ அவன் சொல்ல... அதற்குள் என்னவாயிற்று என்பது போல் அவனை ஏறிட்டாள்.

“இந்த சந்தோஷம் நம் எல்லோருக்காகவும். ஆனால் இப்போ என் சந்தோஷத்திற்காக மட்டும் நீ வாழணும்....“ என்று சொல்லியபடி அவளை இழுத்து அணைத்தான்.

சந்தோஷம் என்பது நம்மால் கொடுக்க முடிந்ததைப் பொறுத்து வருவது. வாங்குவதைப் பொறுத்தது அல்ல என்பதைப் புரிந்து அவளும் அவனை இறுக்கி அணைத்தாள்.



# வழிந்தோடும் நீரோடை

எதிர்நீச்சலில் சிறுமீன்கள்
துவைக்க குளிக்க
பளிங்குப் பாவையர்கள்
துதிபாட புள்ளினங்கள்
தாவிக்குதிக்க குரங்கினங்கள்
சுள்ளிபொறுக்கும் ஏழைபாளைகள்
காவலுக்கு கைத்தடிக்காரன்
ஏவலுக்கு ஏழெட்டு நாய்கள்
பச்சைப்பசேலென செடிகொடிகள்
இச்சைக்கேங்கும் ஏமாளி ஆடவர்கள்
கொச்சைப்படுத்த கொல்லிவாய்பேய்கள்
நச்சென்று பேசிப்பழகும் ஆதிவாசிகள்
இச்சென்று சப்புக்கொட்டும் இயலாமை முதியவர்கள்
ஏராளமாய் பூத்துக்குலுங்கும் மலர்சோலைகள்
மன்மத அம்புகளாய் மங்கையர் பட்டாளம்
கொம்பேறி சுவைநல்கும் தேன்கூடுகள்
கொட்டி வெறுப்பேத்தும் வண்டினங்கள்
வாகனவசதியற்ற ஒத்தையடிப்பாதைகள்
சொல்லிமாளா அழகியவனச்சரகம்
இத்தனைக்குள்ளும் அல்லி அவள்தான்
அழகு ஆசை பேராசை அபிநயசுந்தரி...
அடியே !நீதான் என் இல்லத்தணையாள்....

**கவிஞர் பொற்பனைசுப்பிரமணியன்**

# தர்மம் என்றால் என்ன?

## இந்து சமய உண்மைகள்

நாம் தர்மங்கள் என்றவுடன் தானம் செய்வது என்று எண்ணிக் கொள்கிறோம். உண்மையில் இது தவறாகும். தர்மம் என்பதற்கு தமிழில் அறம் என்ற சொல் உண்டு. தர்மம் என்ற சொல்லுக்கு எண்ணற்ற பொருள்கள் உள்ளன. தர்மம் தான் உலகை நிலைநிறுத்துகின்றது. ஆங்கிலத்தில் தர்மம் எனும் சொல்லைச் சரியாகக் குறிப்பதற்கு ஒரு சொல் இல்லை.

தர்மம் எனும் சொல்லை மிகச் சுருக்கமாகச் சொல்லவேண்டும் என்றால் "முறையான வாழ்வுமுறை" என்று சொல்லலாம். 'ர்தம்' கோட்பாட்டின் அடிப்படையில் விளங்கும் நடத்தைகள் தர்மம் எனப்படும். அத்தகைய செயற்பாங்குகளே, இந்த பிரபஞ்சமும் அதன் உறுப்பினர்களும் முறையாகச் செயல்பட உறுதுணையாகின்றது. 'ர்தம்' என்றால் இயற்கைசெயல்முறைவிதியாகும். அதுவே இந்த பிரபஞ்சத்தையும் அதற்குள் இருக்கும் அனைத்தையும் முறையே செயல்பட இயக்குகின்றது. ஆங்கிலத்தில் விளக்கினால்,

[There is no single word translation for dharma in western languages. Dharma is "right way of living". Dharma signifies behaviors that are considered to be in accord with rta, the order that makes life and universe possible.]

[Ṛta is the principle of natural order which regulates and coordinates the operation of the universe and everything within it.]

தர்மத்திற்கு எதிர்ச்சொல் அதர்மம். பிரபஞ்ச நியதிக்கு எதிராக இருக்கும் செயல்கள் அதர்மம் என்று சொல்லப்படும். இந்த பிரபஞ்சத்தினுள் இருக்கும் அனைத்திற்கும் தர்மங்கள் உண்டு. உயிருள்ள உயிரற்ற எல்லாப் பொருள்களுக்கும் தர்மங்கள் உண்டு. இந்த பிரபஞ்சத்தின் உறுப்பினர்கள் எல்லோரும் தத்தம் தர்மங்களையே முறையே செய்து வருகின்றனர். மனிதர்கள் மட்டும் அதில் சற்று வேறுபட்டு, தங்கள் தர்மங்களை மறந்து அதர்மங்களைச் செய்கின்றனர். இது உலகின் மாயைகளின் காரணத்தால் அவர்கள் செய்வதே. இதுவே அவர்களின் அறியாமை என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு தர்மங்களை மறந்து செயல்படுவதே பிரபஞ்சம் முறையே செயல்படாது அங்கும் இங்கும் அழிவுகள் நேர காரணமாக அமைகின்றது. மனிதர்களே தங்கள் அழிவுக்கு வித்திட்டு, பின்னர் இறைவன் கோபப்பட்டு அழிக்கிறார் என்று அவர்மீது பழியைப் போடுகிறார்கள். மனிதர்கள் 'ர்தம்' கோட்பாட்டிற்கு

கட்டுப்பட்டு தங்களின் தர்மங்களை செய்தால், இந்த பிரபஞ்சத்தில் எதும் குறைகள் வருமோ?

அவ்வகையில் நாம் மனிதர்களின் தர்மங்களைக் காணலாம்.

மனிதர்களின் தர்மங்கள் :-

1) தனக்கு தானே ஆற்றவேண்டிய தர்மம்

-எப்போதும் தன்னை தானே நேசித்துக் கொள்ளவேண்டும். முறையான உணவுப் பழக்கம் வேண்டும். உடல் ஆரோக்கியத்தை சிதைக்கும் உணவுகளைத் தவிர்க்கவேண்டும். நன்கு கல்வி கற்கவேண்டும். மெய்ப் பொருளை உணர்தல் வேண்டும். எப்போதும் தெளிவான ஞானத்தோடு இருத்தல் வேண்டும்.

2) இறைவனுக்குச் ஆற்றவேண்டிய தர்மம்

-இறைவன் மீது பக்தியும் பாசமும் கொண்டிருக்க வேண்டும். மலர், நீர், இலை, பழம் வைத்து இறைவனை வழிபடுதல் சிறப்பு. இறைவன் எங்கும், எல்லா உயிர்களிலும் நிறைந்திருக்கிறார். எல்லா உயிர்களையும் நேசிப்பதும் இறைவனை நேசிப்பதற்கு ஒப்பாகும்.

3) பித்ருக்களுக்குச் ஆற்றவேண்டிய தர்மம்

-பித்ருக்கள் என்றால் ‘தென்புலத்தார்’. அதாவது மறைந்த நம் முன்னோர்களே பித்ருக்கள். அவர்கள் செய்த நன்மைகள் நாம் என்று மறவாது, அவர்களை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். அவர்கள் நினைவாக அவர்களின் நினைவு நாட்களில் அவர்களுக்கு ஆகம முறைபடி மரியாதை செய்யவேண்டும். அவர்களின் மோக்ஷத்திற்காக எப்போதும் பிரார்த்தனை செய்யவேண்டும்.

4) பிள்ளைகளுக்குச் ஆற்றவேண்டிய தர்மம்

-நமது பிள்ளைகளை நன்றாக, பாசமும் நேசமும் ஊட்டி வளர்க்க வேண்டும். அவர்கள் தேவையானவற்றை செய்து கொடுத்தல் வேண்டும். முறையான கல்வியும் ஒழுக்கமும் கற்றுத்தர வேண்டும். அவர்கள் தங்களின் பொறுப்புகளையும் கடமைகளையும் செய்ய கற்றுத்தர வேண்டும். அறிஞர்கள் மத்தியில் நாம் பெற்ற செல்வங்கள் முந்தியிருக்க செய்யவேண்டும். அவர்களின் கல்வி யாற்றல் இவ்வுலகிற்கு நன்மைப் பயக்கவேண்டியதாக இருக்கவேண்டும்

5) சக மனிதர்களுக்குச் செய்ய வேண்டிய தர்மம்

-சக மனிதர்களுக்குத் தானம் செய்வதே சிறந்தது. நம்மால் முடிந்தவரை உணவு தானம், துணிகள் தானம், புத்தகங்கள் தானம் செய்யலாம். சிலவேளைகளில் சக மனிதர்களுக்கு நல்ல ஞானத்தை அருள்வதும் தானமாக தான் போற்றப் படும். எப்போதும் மனிதர்களை நேசிக்க வேண்டும். உயர்வு தாழ்வு பாராமல் எல்லோருடனும் சகஜமாகப் பழகவேண்டும். ’மக்கள் சேவையே மகேசன் சேவை’ என்பதற்கு ஒப்ப, நாம் மக்களுக்கு நல்ல தர்மங்களைப் புகட்டுவதை சேவையாக செய்யவேண்டும். யாரைப் பார்த்தாலும் கையெடுத்து நெஞ்சத்திற்கு நேராக வைத்து கும்பிட்டு வணக்கம் / நமஸ்காரம் என்று சொல்லவேண்டும். இதன் பொருள் “உங்களுக்குள்ளும் உறையும் இறைவனை நான் மனதார வணங்குகிறேன்” என்பதாகும்.

இவை சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட அடிப்படை தர்மங்கள். இதை விடுத்து மனிதர்கள் ஆற்றவேண்டிய சில தர்மங்கள் உள்ளன.

# ஷெர்லி அப்படித்தான்

## எஸ்.ராமகிருஷ்ணன்

**கா**லிங் பெல் அடிக்கும் சப்தம் கேட்டது. வாசலில் ஷெர்லி பிராங் நின்று கொண்டிருந்தாள், அவள் பூசியிருந்த லாவெண்டர் செண்டின் நறுமணம் அவள் வீட்டிற்குள் வருவதற்கு முன்னதாகவே நுழைந்திருந்தது. இவ்வளவு அடர்த்தியான வாசனை திரவியத்தைப் பூசிக் கொள்கிற ஒரே பெண் அவளாகத் தானிருக்ககூடும்

ஷெர்லி பிராங் வாசலில் நின்று கொண்டிருக்கிறாள் என்றால் அன்று ஏழாம் தேதி என்று அர்த்தம், ஒவ்வொரு மாதமும் 7ம் தேதி அன்று மாலை நான்கு மணிக்கு ஷெர்லி அப்பாவைப் பார்ப்பதற்காக வீட்டிற்கு வருவது வழக்கம், இது இருபத்தைந்து வருஷங்களுக்கும் மேலாக நடந்து வருகிறது,

அப்பா கடந்த ஒருவருசமாகவே நோய்முற்றி படுக்கையில் கிடக்கிறார், பேச்சும் ஒடுங்கிவிட்டது, கழிப்பறைக்குத் தூக்கி போய்விடுவதற்குக்கூட ஆள் வைத்தாகிவிட்டது, யார் அறைக்குள் போனாலும் அவருக்கு முகம் தெரியவில்லை, காதும் மங்கிவிட்டதால் சப்தமாகப் பேசிய போதும் அவர் கேட்டுக் கொண்டதாகவேயில்லை, அப்பாவை தேடி வருபவர்கள் குறைந்து போய்விட்டார்கள், ஆனால் ஷெர்லி வரத் தவறுவதேயில்லை.

எங்கள் ஊரில் இருந்த ஒரே ஆங்கிலோ இந்தியப்பெண் ஷெர்லி மட்டும் தான், அவள் எப்போதும் பூப்போட்ட கவுன்களைத் தான் அணிகிறாள், பாரதி நகரில் புதுவீடு கட்டிக் கொண்டு குடியேறிய போதும் ஒரு காலத்தில் தனக்கு வாடகைக்கு வீடு கொடுத்தவர் என்ற முறையில் அப்பாவை காண வருவதை ஷெர்லி வழக்கமாகக் கொண்டிருந்தாள்.

சென்ற மாதம் வந்த போது கூட அம்மா சொன்னாள்.

ஏன் ஷெர்லி உன்னை இப்படி வருத்திக்கிடுறே, அவருக்கு நீ வந்து போவது கூடத் தெரியாது, உனக்குத் தான் வீண் அலைச்சல்.

அப்படியில்லை மீனாம்மா, நான் உயிருடன் இருக்கிற வரைக்கு அவர் செய்த நன்றியை மறக்க கூடாது, இது என் கடமை,

என்று அப்பாவின் அறைக்குள் போய் அவர் கைகளை எடுத்து தன்னுடன் வைத்துக் கண்ணை மூடி பிரார்த்தனை செய்துவிட்டு பத்து நிமிசம் அமைதியாக உட்கார்ந்திருந்தாள், பிறகு விடைபெற்றுக் கொண்டு போய்விட்டாள் இன்றைக்கும் அதற்காகத் தான் வந்திருக்கிறாள், என்ன மனுஷி அவள், எப்போதோ தனக்குக் குடியிருக்க வாடகை கொடுத்த ஒருவரை இத்தனை ஆண்டுகளாகத் தேடி வந்து நன்றி சொல்லி கொண்டேயிருக்கிறாளே,

நன்றியுணர்ச்சி என்பது இவ்வளவு ஆழமானதா என்று தோன்றியது,

பல ஆண்டுகளாகப் பழகிப்பழகி ஷெர்லி எங்கள் வீட்டுப்பெண்களில் ஒருத்தியாகவே மாறியிருந்தாள், எனது தங்கையின் திருமணத்தின் போது ஷெர்லிக்கும் பட்டுபுடவை எடுத்துத் தந்தார்கள், அதை ஏற்றுக் கொண்டு திருமணத்தின் போது மணமகனுக்கு ஒரு மோதிரம் அணிவித்ததோடு தனது வீட்டில் புது மணத் தம்பதிகளுக்கு விருந்தும் அளித்தாள்

ஷெர்லி பேசுவது ஒரு பறவை சப்தமிடுவதைப் போலத்தானிருக்கும், ஒவ்வொருமுறை அப்பாவை காணவரும் போதும் வீட்டில் தயாரித்த முந்திரி கேக் ஒன்றினை அழகான காகிதம் சுற்றி எடுத்துக் கொண்டுவருவாள்,

ரயில்வே பீடர் ரோட்டில் எங்களுக்கு ஆறு வீடுகள் இருந்தன, அதை வீடு என்று சொல்லமுடியாது, புறாக்கூடு போன்ற சிறிய இருட்டறை, லயன்வீடு என்று சொல்வார்கள், அதில் ஒன்றில் தான் ஷெர்லி ஆரம்பக் காலத்தில் குடியிருந்தாள்,

அவளது கணவன் பிராங்க் எங்கள் ஊரில் இருந்த கேத்தி மில்லில் வேலை செய்து கொண்டிருந்தவன், அவனது புகைப்படத்தைப் பார்த்திருக்கிறேன், கிரிக்கெட் விளையாட்டுகாரன் ரோஜர் பின்னியை போன்ற முகஅமைப்பு அவனுக்கு இருந்தது,

பிராங் பர்கான்பூரில் வேலை செய்து கொண்டிருந்த போது ஷெர்லியோடு பழக்கம் ஏற்பட்டிருக்கிறது, ஷெர்லியின் கணவன் ஹெர்பட் ஒரு ராணுவ அதிகாரியாக இருந்தான், அவனுடன் வாழ்ந்து ஷெர்லி ஸ்டீவ் என்ற ஆண் குழந்தையைப் பெற்றிருந்தாள், அந்த நாட்களில் தன் கணவனைக் காண வந்த பிராங்கோடு டென்னிஸ் விளையாட துவங்கியதில் ஏற்பட்ட பழக்கம் அவன் மீதான காதலாக உருமாறியது

அதை ஷெர்லி ஸ்ரேஞ்ச் லவ் என்று சொல்வாள், ஸ்ரேஞ்ச் என்ற சொல்லை அவள் உச்சரிக்கும் போது தான் அதன் உண்மையான அர்த்தம் வெளிப்படுவது போலவே இருக்கும், காதலின் தீவிரத்தில் ஹெர்பட்டை விட்டுவிட்டு பிராங்கோடு அவள் மைசூருக்கு கிளம்பிப் போனாள், அங்கிருந்து கோரக்பூர், பின்பு புதுச்சேரி, அதன்பிறகு எங்கள் ஊரில் ஆரம்பிக்கபட்ட கேத்தி மில்லின் பொறியாளராகப் பிராங்க் வந்து சேர்ந்திருந்தான்

ஷெர்லிக்கு நினைவாற்றல் மிகவும் அதிகம், தான் எந்த நாளில் எந்தப் பேருந்தில் வந்து இறங்கினோம், அன்றைக்கு ஊரில் வெயில் எப்படியிருந்தது, யார் யாரை எல்லாம் சந்தித்தோம் என்பதை இப்போதும் துல்லியமாகச் சொல்வாள்,

ஷெர்லிக்குப் மூன்று பிள்ளைகள், அதில் மூத்தவன் மார்டி, இளையவன் ஹெப்பா, மூன்றாவது பெண் டோல், வந்த புதிதில் மில்லின் உள்ளேயே இருந்த குடியிருப்பில் அவர்கள் வசித்தார்கள்,

கிராப் தலையுடன் ஒரு வெள்ளைக்காரி சைக்கிள் ஒட்டிக் கொண்டு ஊரைச்சுற்றுகிறாள் என்று அன்று ஊரே அவளைப்பற்றிக் கேலி பேசிக் கொண்டிருந்தது,

ஷெர்லியின் அடையாளம் அவளது பொன்னிறமான தலைமயிர், மற்றும் சிவப்பு நிற ராலீஸ் சைக்கிள், ஷெர்லி சிகரெட் பிடிக்கிறாள் என்பதைப் பற்றி ஆண்கள் வியந்து பேசிக் கொள்வார்கள், ஷெர்லிக்குப் புகைப்படம் எடுப்பதில் ஆர்வம் அதிகம், மில்லில் நடந்த விளையாட்டு போட்டிகளின் போது அவள் அருணா ஸ்டுடியோ போட்டோகிராபரிடம் இருந்து கேமிராவை வாங்கி விதவிதமாகப் போட்டோ எடுத்தாள் என்பது பலராலும் பேசப்பட்டது,

ஷெர்லியின் கணவன் பிராங் மஞ் சள் காமாலை கண்டு இறந்து போகும்வரை அவளுக்கு அந்த ஊரில் அதிகம் ஆட்களைத் தெரியாது, காய்கறி மற்றும் பழங்கள் வாங்குவதற்கு மார்க்கெட் போய்வருவதும், ஞாயிறுகிழமைகளில் குழந்தைகளை அழைத்துக்

கொண்டு புனிதமேரி தேவாலயத்திற்குப் பிரார்த்தனை செய்யப் போவதும், அன்றாடம் வீட்டில் இசை கேட்பதும் தான் அவள் உலகமாக இருந்தது, ஆனால் பிராங்கின் மறைவு அவளது உலகை அப்படியே கலைத்துப் போட்டது,

மூன்று குழந்தைகளை வைத்துக் கொண்டு அவள் குடியிருக்க வீடு கிடைக்காமல் தேடி அலைந்த நாட்களில் தான் அப்பாவை சந்தித்திருக்கிறாள், மழைக்காலத்தின் ஒரு அதிகாலையது,

அப்பா மில்லின் உள்ளிருந்த மைதானத்தில் நடைபயிற்சிக்கு போவது வழக்கம், நிறைய மரங்கள் அடர்ந்திருந்த மில்லின் உட்புறச்சாலைகள் மிகவும் அழகானவை, அதுவும் காலைவேளையில் பறவைகளின் சப்தமும், இலைகளின் பசுமையும் பார்த்துக் கொண்டு நடப்பதற்கு ரம்மியாக இருக்கும்,

அப்பா இது போன்ற விஷயங்களில் தேர்ந்த ரசனை கொண்டவர், மயில்சப்தம் கேட்கவேண்டும் என்பதற்காகத் தேனூத்துப் பாலம் வரை நடந்து போகிறவர் அவர், தினமும் வீட்டில் இருந்து மில் வரை சைக்கிளில் போய் இறங்கி இரண்டாவது கேட்டின் முன்பாகச் சைக்கிளை நிறுத்தி பூட்டிவிட்டு அப்பா இறங்கி உள்ளே நடக்க ஆரம்பிப்பார், முக்கால் மணி நேர நடைக்குப் பிறகு மகிழமரத்தடியில் உள்ள சிமெண்ட் பெஞ்சில் வந்து உட்கார்ந்து கொள்வார், கண்ணை மூடிக் கொண்டு பத்து நிமிசம் இந்த உலகையே மறந்து அமர்ந்திருப்பார், அந்தப் பெஞ்ச் மழைக்காலத்தில் ஈரமாகி குளிர்ந்திருக்கும், அந்தக் குளிர்ச்சியோடு உட்காருவது ஒரு சுகம், அன்றைக்கும் காலையில் அவர் அப்படித் தான் நடைபயிற்சியை முடித்துவிட்டு அந்தப் பெஞ்சினை தேடி வரும்போது அதில் ஷெர்லி உட்கார்ந்திருப்பதைக் கண்டார், அவள் புகை பிடித்துக் கொண்டிருந்தாள், தனிமையில் ஒரு பெண் கவலை தோய்ந்த முகத்துடன் புகைப்பிடித்துக் கொண்டிருந்த காட்சி அப்பாவின் மனதை ஏதோ செய்திருக்க வேண்டும்,

அவர் தயக்கதுடன் அதே பெஞ்சில் தான்



**உலக அழகி நீதான் என்று சிறு பொய் சொல்லவா !**
**உடை விலகி இடை தெரிந்தால் கொஞ்சம் கிள்ளவா !**
**உலையில் அரிசி போடும் போது உதவி செய்யவா !**

உட்காருவதா வேண்டாமா என்ற நின்ற போது அவள் கண்ஜாடையில் உட்காருங்கள் என்று சொல்லியிருக்கிறாள், அப்பா பெஞ்சின் ஒரு நுனியில் உட்கார்ந்து கொண்ட போது ஷெர்லி அவரிடம் தயக்கத்துடன் எனக்கு ஒரு உதவி செய்யமுடியுமா என்று கேட்டாள்,

அப்பா அவளிடம் மை டியர் பிரண்ட், வாட் கேன் ஐ டூ பார் யூ என்று கேட்டிருக்கிறார், அறிமுகமே ஆகாத தன்னைத் தோழி என்று அவர் அழைத்த விதம் அவளை நெகிழச்செய்திருக்க வேண்டும், அவள் தனது நிர்கதியை சொல்லி அழுதிருக்கிறாள்,

அப்பா அவள் பேசி முடிக்கும்வரை அமைதியாக இருந்துவிட்டு பிறகு குழந்தைகளை அழைத்துக் கொண்டு உனது பொருட்களை எடுத்துக் கொள், வீடு நான் தருகிறேன் என்று மட்டும் சொல்லியிருக்கிறார்

அன்று மாலை எங்களது லயன் வீடுகளில் காலியாக இருந்த ஒன்றில் ஷெர்லியை அப்பாவே குடிஅமர்த்தியதோடு அவள் கையில் நூறு ரூபாய் பணம் கொடுத்து இதை வைத்துக் கொண்டு ஒரு தையல் மிஷினை வாங்கிப் பிழைத்துக் கொள், இந்த வீட்டிற்கு வாடகை எதையும் தர வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்

ஷெர்லி தையல்மிஷினை வாங்கவில்லை, அவள் மதுரைக்குப் போய் ஒரு கேமிராவை வாங்கி வந்தாள், திருமணவீடு, பள்ளி நிகழ்ச்சிகள், பொதுக்கூட்டங்கள் எனப் பல்வேறு புகைப்படங்களை எடுத்து தர துவங்கினாள், வீட்டிலே ஒரு அறையைப் புகைப்படப் பணிகளுக்கு ஒதுக்கி கொண்டாள், அவளது பிள்ளைகள் அரசுபள்ளியில் தான் படித்தன, அப்பா அவளிடம் வாடகை கேட்கவேயில்லை, அழகான ஒரு இளம்பெண் உள்ளுரில் புகைப்படம் எடுத்து வாழ்வது எளிதானதில்லை, ஷெர்லியை சந்திக்கிற ஆண்கள் ஒவ்வொருவரும் அவளுடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்ளவே ஆசைப்பட்டார்கள், அவள் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காக மிகுந்த கோபக்காரி என்ற தோற்றத்தை உருவாக்கி கொண்டாள், அவளது பேச்சில், நடையில் அகம்பாவம் கொண்டவள் போலவே இருப்பாள், பொது இடங்களில் அவள் சிகரெட் புகைப்பதை பலரும் திட்டியிருக்கிறாள்,

அவள் தன்னை அவமானமாகப் பேசி ஆட்களைக் குடையால் அடித்திருக்கிறாள், ஷெர்லி குடிகாரி, போதைமருந்து சாப்பிடுகிறவள், சிறுவர்களை மயக்கி அனுபவிக்கின்றவள் என்று வதந்திகள் அவளைப் பற்றிப் பரவின,

அப்பா ஒரு போதும் அது எதையும் பற்றி அவளிடம் கேட்டுக் கொண்டதேயில்லை, அப்பா சில வேளைகளில் அவளுக்குக் கடனுதவி செய்திருக்கிறார், சில ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார், அப்பாவிற்கு இப்படி ஒரு பெண் தோழி இருப்பதைப் பற்றி உறவினர் பலரும் அவதூறு பேசிய போது அம்மா அது அவரது விருப்பம், அவர் மேல் எனக்கு நம்பிக்கையிருக்கிறது என்று உறுதியாகச் சொல்லிவிட்டாள்,

எங்கள் வீட்டில் நடக்கிற எல்லா முக்கிய நிகழ்வுகளையும் ஷெர்லி தான் புகைப்படம் எடுத்திருக்கிறாள், அப்பாவை மரநிழலில் நிற்க வைத்து அவள் எடுத்த புகைப்படம் தான் இப்போது ஹாலில் மாட்டப்பட்டிருக்கிறது, அவளுடன் நட்பாகப் பழகிய போதும் ஒரு தடவை கூட அவள் வீட்டிற்கு அப்பா போனதேயில்லை,

ஷெர்லி அப்பாவை தங்கரத்னம் என்று பெயரைச் சொல்லி தான் கூப்பிடுவாள், ரெட்டினம் என்று அவள் உச்சரிப்பதை நாங்கள் கேலி செய்வது வழக்கம், அப்பா அவளுட்ன் ஆங்கிலம் பேசும் போது கச்சிதமான வார்த்தைகளைத் தேர்வு செய்து கவிதையைப் போல எப்படிப் பேசுகிறார் என்று எங்களுக்கு எல்லாம் வியப்பாக இருக்கும்,

அவர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருப்போம், ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு புதிய சொல்லை அவர்கள் பயன்படுத்துவார்கள், அப்படிதான் abli என்ற சொல்லை கேள்விப்பட்டேன், ஷெர்லி போன பிறகு

அப்பாவிடம் அதற்கு என்ன அர்த்தம் என்று கேட்டபோது ஐ பிலீவ் என்பதைத் தான் அப்படிச் சொல்கிறாள் என்றார்,

உன் கணவர் ஒரு ஜெம், அவரைக் கவனமாகப் பாதுகாத்து வைத்துக் கொள், கடவுள் உங்களுடன் எப்போதும் துணை இருப்பார் என்று ஷெர்லி அம்மாவிடம் பலமுறை சொல்லியிருக்கிறாள்,



ஒருமுறை அம்மா உடல் நலமற்று மருத்துவமனையில் இருந்த போது யாரோ சொன்னார்கள் என்று ஷெர்லி அம்மா நலம் பெறுவதற்காக இருக்கன்குடி மாரியம்மன் கோவிலில் மொட்டை அடித்துக் கொண்டு வந்து நின்றாள், அவள் கையில் திருநீறு பொட்டலம் இருந்தது, அதைக் கண்ட அம்மா தன்னை மீறி வெடித்து அழுதுவிட்டாள், அந்த ஒரு செய்கை அவளை ஒரு உடன்பிறந்த தங்கையைப் போல அம்மாவை நினைக்கச் செய்துவிட்டது

ஒருநாள் அம்மா என்னிடம் சொன்னாள். எங்கேயோ பிறந்து எங்கயோ வளர்ந்து நம்ம ஊர்ல வந்து புருஷனை பறிகொடுத்து மூணுபிள்ளைகளை வச்சிகிட்டுக் கஷ்டப்படுறா பாரு, அவளுக்கு நம்மளை விட்டா யாருடா இருக்கா, அவள் தலைஎழுத்து இங்கே வந்து கஷ்டப்படணும்னு எழுதியிருக்கு, அவ இடத்தில் நான் இருந்திருந்தா வேதனையில் இந்நேரம் செத்துப்போயிருப்பேன், அவளைப் பாத்து தான் நானே வாழ கத்துகிட்டேன்

தனது கஷ்டங்களைப் பற்றி ஷெர்லி யாரிடமும் புலம்பியதில்லை, தனது சந்தோஷங்களை மட்டுமே மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கிறாள், லயன் வீட்டினை ஒட்டிய சாந்தி டீச்சரின் வீட்டில் இருந்த எலுமிச்சை செடி ஒன்று ஒரு முறை சூறைக்காற்றில் விழுந்துவிட்டதை அறிந்த ஷெர்லி தானே வீடு தேடிப் போய் எலுமிச்சை செடியை முட்டுக் கொடுத்து நிறுத்தி கயிறு கொடுத்து கட்டி மறுபடி மண்ணில் வேர் ஊன்ற செய்துவிட்டாள், அது முதல் எங்கே மரம் முறிந்துவிட்டாலும் அவளைச் சொஸ்தப்படுத்த கூப்பிடுவார்கள், அவளும் போய் அதைச் சரிசெய்துவருகிறாள்,

ஷெர்லியிடம் சில அபூர்வமான குணங்கள் இருந்தன, அதில் ஒன்று தெருநாய்களுக்குச் சாப்பாடு போடுவது, இதற்காகவே அவள் மாட்டு இறைச்சியை விலை கொடுத்து வாங்குவாள், தனது சைக்கிளில் வீதிவீதியாகப் போய்த் தெருநாய்களை அழைப்பாள், அவளைக் கண்டதும் நாய்கள் தானே ஒன்று கூடிவிடுகின்றன, நாய்களின் முதுகை தடவிவிட்டுக் கொண்டுவந்திருந்த உணவை நாய்களுக்குக் கொடுப்பாள், பிறகு அந்த நாய்களுடன் உடலில் உள்ள உண்ணிகளை எடுத்துப் போட்டுவிட்டுச் சண்டைபோடாமல் இருங்கள் என்று அறிவுரை சொல்லிவிட்டுச் சைக்கிளில் புறப்பட்டுப் போய்விடுவாள்,

அவள் ஆட்டுகுட்டி ஒன்றை தனது கடைக்கு அழைத்து வந்து சாப்பிடுவதற்குக் கத்திரிக்காய் வாங்கித் தந்ததாகப் பெட்டிக்கடை கிருஷ்ணன் சொன்ன போது அது ஒன்றும் பெரிய ஆச்சரியமாக எனக்கு இருக்கவேயில்லை, ஷெர்லி அப்படித்தான்,

பள்ளி நாட்களில் அப்பா எங்களை ஆங்கிலம் படிப்பதற்காக ஷெர்லி வீட்டிற்கு

அனுப்பி வைத்தார் அவள் எங்களுக்கு ஆங்கிலம் கற்று தந்ததை விடவும் வித விதமான இனிப்புப் பணடங்களைச் செய்து தந்து சாப்பிட வைத்துச் சந்தோஷப்படுத்தியது தான் அதிகம்

அவளது மூத்தமகன் மார்டி பள்ளியின் ஹாக்கி டீமில் இருந்தான், அவன் மிகச்சிறந்த விளையாட்டுகாரன், ஆனால் கடுமையான முன்கோபி, போட்டி விளையாட்டுகளின் போது எதிரில் விளையாடுபவர்களை மட்டையால் அடித்து மண்டையை உடைத்துவிடுகிறான் என்று அவனைப் பலமுறை நீக்கம் செய்திருக்கிறார்கள்

மார்டி என்னுடன் ஸ்நேகமாக இருப்பான், அவன் தீவிர எம்ஜிஆர் ரசிகனாக இருந்தான், எந்தப் புதுப்படம் வந்தாலும் முதற்காட்சிக்கே போய்விடுவான், எம்ஜிஆரைப்போலவே இமிடேட் செய்து காட்டுவதும் அவனது வழக்கம், அவனை எப்படியாவது கப்பற்படைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பது ஷெர்லியின் விருப்பமாக இருந்தது, ஆனால் அவன் அவளது ஆசையை நிறைவேற்றவில்லை, தூத்துக்குடியை சேர்ந்த ஒரு மீனவப்பெண்ணைக் காதலித்து மணந்து கொண்டு கருவாட்டு வியாபாரி ஆகிப்போனான், அதில் ஷெர்லிக்கு பயங்கரமான மனவருத்தம், அவள் கவலையுற்ற நாட்களில் அதிகம் வேலை செய்வாள், மனதை துயரத்திலிருந்து விடுபடச் செய்வதற்குக் கடினமான வேலைகளைச் செய்ய வேண்டும் என்று அவளது அம்மா கற்றுத் தந்திருப்பதாகச் செர்ல்வாள்,

அடுத்தவன் ஹெப்பா, இடது கை பழக்கம் கொண்டவன், அவன் தான் அந்த வீட்டிலே பூஞ்சை, சில சமயம் எங்கள் வீட்டிற்கு அவனையும் ஷெர்லி அழைத்து வருவாள்,

எனது அம்மா தரும் காபியை ஹெப்பா ஒரு போதும் குடித்ததேயில்லை, அவனால் சூடான எதையும் ஒரு மடக்கு கூடக் குடிக்க முடியாது, அவன் ஒரு குளிர்பிராணி, ஐஸ்கட்டிகளை வாங்கி வாயில் போட்டுத் தின்கிறான், எங்கள் ஊரின் பனி இவன் ஒருவனுக்குள் தான் மிச்சமிருக்கிறது என்பாள், ஹெப்பா நன்றாக

# ஏமாற்றுச் சிகரங்களில் ஏறியவாறு !

**நற்கொள்கை வகுக்காமல்
அணியில் கூட்டலும்
கழித்தலும் அன்றாடம்
நிகழ்தலின் உச்சம் !
சொத்துக்களைக் குவித்தலும்
பெருக்கலுமே குறிக்கோளாய்
அரசியலார் கொண்டிருக்கும்
அவலநிலை !
காற்புள்ளிகளும் அரைப்புள்ளிகளும்
அன்றாடம் கைதட்டி ஆர்பரிக்க....
உழைப்புகளால் கேள்விக்குறியாய்
முதுகு வளைந்த மக்களோ....
ஆச்சரியக்குறியாய் விழிபிதுங்க
நிர்பந்த அடைப்புக்குறிகளுக்குள்
தள்ளப்பட்டனர்...!
அடடா... மேற்கோள்கள் அற்ற
கட்டுரைபோல் வெறுமனே
தமிழின மக்கள்
தினம் தினம் போராடித்
தோற்றுக் கொண்டிருக்கின்றனர்...
ஏமாற்றுச் சிகரங்களில்
ஏறியவாறு !**

**கா.ந.கல்யாணசுந்தரம்**



மவுத் ஆர்கான் வாசிப்பான், அதற்காகவே அவனைத் தேடி நான் போயிருக்கிறேன், அதிலும் ஹிந்திபாடல்களை அவன் வாசிக்கக் கேட்பது மயக்கம் தருவதாக இருக்கும்,

ஹெப்பா ஒருவன் தான் தனது தந்தையை அடிக்கடி நினைத்துக் கொள்கின்றவன், அப்பாவின் மரணத்தைப் பற்றி அவன் நினைக்க ஆரம்பித்த நாட்களில் சாப்பிடவே மாட்டான், யாருடனும் பேசவும் மாட்டான், மவுத் ஆர்கான் வாசித்துக் கொண்டே இருப்பான், அந்த இசையில் பீறிடும் துயரத்தை கேட்டு ஷெர்லி அழுவாள்,

அவன் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இந்தக் கைகளால் அப்பாவை தொட்டு இருக்கிறீர்கள் தானே, அதை எனக்குத் தாருங்கள், உங்கள் வழியாக நான் அப்பாவை தொட்டுக் கொள்கிறேன் என்று கேட்பான், இருவரும் ஒருவரையொருவர் கட்டிக் கொண்டு அழுவார்கள்,

அவன் தான் முதன்முதலாக என்னைக் கோனியாக் குடிப்பதற்குப் பழக்கியவன், யாரோ நண்பன் கொடுத்தது என்று ரகசியமாக ஒரு மூடி கோனியாக் பிராண்டியை எனக்குக் குடிக்கத் தந்து நண்பனே ஒரு பெண்ணை முத்தமிடுவதைப் போல ரசித்துக் குடிக்க வேண்டும், என்னைப் பார் என்று ஒவ்வொரு சொட்டாக அவன் சுவைத்துக் குடித்தான்,

ஹெப்பா கிறிஸ்துமஸ் காலங்களில் எங்கள் வீட்டிற்கும் ஒரு நட்சத்திரம் கொண்டுவந்து கட்டிவிட்டு போவான், மேடைநாடகங்களில் நடிப்பான், யாருடனாவது பைக்கில் ஏறிக் கொண்டு ஊரை சுற்றிக் கொண்டேயிருப்பான், ஒரு நாள் இல்லட்ஸ்ரேடட் வீக்லியில் அவனது கவிதை வெளியாகி இருப்பதை எடுத்துக் கொண்டு வந்து காட்டினான்,

ஷெர்லி அந்தச் சந்தோஷத்தை கொண்டாடுவதற்காக வான்கோழி பிரியாணி செய்தாள், ஹெப்பா தனது நண்பன் ஒருவனின் கல்யாணத்திற்காகச் சோழவந்தான் போய்விட்டு இரவில் திரும்பி வரும் போது சாலை விபத்தில் லாரியில் மோதி இறந்து போனான், அவன் உடலை பெற்றுக் கொள்வதற்காக ஷெர்லியை அழைத்துக் கொண்டு அப்பா தான் போயிருந்தார்,

ஷெர்லி மகனின் சாவில் உடைந்து போயிருந்தாள், ஆறுமாதம் காலம் அவள் படுக்கையிலே கிடந்தாள், நாள் முழுவதும் மகனை நினைத்து அழுவதும் நினைத்தாற் போல எழுந்து பிரார்த்தனை செய்து கொள்வதுமாக நாட்களை ஒட்டினாள், அப்போது எனது அம்மா தினசரி அவளைப் போய்ப் பார்த்து வருவது வழக்கம்,

பின்பு ஒருநாள் ஷெர்லி உடலும் மனமும் தேறி வந்து புகைப்படம் எடுக்கத் துவங்கினாள், அந்த வீட்டிலே ஷெர்லியோடு சதா சண்டையிடுகின்றவளும் இந்தியாவைச் சுத்தமாகப் பிடிக்காதவளுமான வளர்ந்தவள் டோல், எப்படி அது போல ஒருத்தி தனக்கு மகளாகப் பிறந்தாள் என்று ஷெர்லி திட்டியிருக்கிறாள்,

டோல் மிகவும் கர்வமான பெண், தான் ஒரு அழகி என்ற பெருமிதம் கொண்டவள், அத்துடன் தான் ஒரு ஆங்கிலோ இந்தியப்பெண் என்பதை ஒவ்வொரு அசைவிலும் நிரூபணம் செய்து கொண்டேயிருப்பாள், மற்றவர்கள் பேசும் ஆங்கிலத்தைக் கடுமையான கேலி செய்வது, பையன்களைப் போலக் கிரிக்கெட் விளையாடுவது, பியர் குடிப்பது என டோலி செய்யாத வேலைகளே இல்லை,

அவளைக் காதலித்த உள்ளூர் பையன்களை அவள் தன் பின்னால் சுற்றி அலைய விட்டாள், பின்பு ஒரு நாள் அவளை விடப் பதினைந்து வயது மூத்த டாக்டர் இமானுவேலை தான் பதிவு திருமணம் செய்து கொண்டதாகச் சொன்ன போது ஷெர்லி அவளைக் குடையால் அடித்து வீட்டை விட்டு துரத்திவிட்டாள், அந்த டாக்டரை ஆண்டவர் பார்த்துக் கொள்வார் என்று சாபமிட்டார், அதன்பிறகு ஷெர்லி தனிமையில் வாழத்துவங்கினாள், முன்பு போல அவள் புகைப்படம் எடுப்பதற்கு ஒத்துக் கொள்ளவில்லை, மனதை அழுத்தும் வலியில் இருந்து விடுபடுவதற்காகப் பின்னல் வேலை செய்யத் துவங்கி நாள் முழுவதும் லேஸ்




பின்னிக் கொண்டேயிருந்தாள், அவள் பின்னிய ஒரு வெண்ணிற ஸ்கார்பை அப்பாவிற்குப் பரிசாகத் தந்திருக்கிறாள்,

ஷெர்லியின் மூத்தபையன் மார்டி ஒரு நாள் திரும்பிவந்து தன்னோடு வந்துவிடும்படியாக அவளைத் தூத்துக்குடிக்கு அழைத்துக் கொண்டு போனான், தனது தங்கை டோலி அந்த டாக்டருடன் மும்பையில் சந்தோஷமாக வாழ்கிறாள் என்று மார்டி சொன்னதைக் கூட ஷெர்லி பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

தூத்துக்குடியில் இருந்து பத்தே நாட்களில் திரும்பிவந்துவிட்டாள், குழந்தைகள் இல்லாத அந்த வீட்டில் இருப்பது மூச்சுமுட்டுகிறது, தான் ஒரு புதுவீடு கட்டப்போகிறேன், அதில் தான் மட்டுமே வசிக்கப் போவதாகச் சொல்லியதோடு வங்கி கணக்கில் இருந்த பணதை எடுத்து பாரதி நகரில் ஒரு வீடு கட்ட துவங்கினாள்

அப்பா தான் அந்த வீட்டினை திறந்து வைத்தார், அழகிய வீடாக இருந்தது, அந்த வீட்டில் அப்பாவின் புகைப்படம் ஒன்றினை ஹாலில் மாட்டி வைத்திருந்தாள், அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டதற்காக அவள் அப்பாவிற்கு இங்கில்பெர்ட்டின் இசைத்தட்டுகளைப் பரிசாகக் கொடுத்தாள், அதை வாங்கிக் கொண்டதும் ப்ரோ, உங்களுக்கு மனக்கஷ்டமாக இருந்தால் இதில் உள்ள லவ் மீ வித் ஆல் யுவர் ஹார்ட் பாடலை கேளுங்கள், அது ஒரு அருமருந்து என்று சொன்னாள்

அப்பா அதன்பிறகு தான் இங்கில்பெர்ட்டின் இசைக்கு அடிமையாகத் துவங்கினார், எங்கள் வீட்டில் பகலும் இரவும் இங்கில்பெர்ட் பாடிக்கொண்டேயிருந்தார், அந்தக் குரலில் ஏதோவொரு மாயமிருந்தது, தேனை சுவைத்து சாப்பிடுவதைப் போல அப்பா அதைத் துளித்துளியாக ருசித்துக் கேட்டுக் கொண்டிருந்தார்,

ஒருமுறை ஷெர்லி சொன்னாள்.

மனிதர்களைத் துயரத்தில் இருந்து மீட்பதற்காகவே பாடகர்களைக் கடவுள்

படைத்திருக்கிறார், இங்கிள்பெர்ட் மதராசில் பிறந்தவன், அவன் குரலில் நம் ஊரின் வாசம் அடிக்கிறது

ஷெர்லி நம் ஊர் என்று தமிழ்நாட்டினை குறிப்பிட்டதை அப்பா பெருமையுடன் சொல்லிக் கொண்டிருந்தார், ஷெர்லி தனது துயரங்களைத் தனக்குள் ஒடுக்கி கொண்டு சகமனிதர்களைப் பூரண அன்புடன் நேசிக்கத் தெரிந்திருந்தாள், அது எவ்வளவு பெரிய பாக்கியம் என்று தோன்றியது

•••

காலிங் பெல்லின் ஒசை மறுபடி கேட்டது, மாடியில் இருந்து நான் இறங்கி வருவதற்குள் உறக்கம் கலைந்த அம்மா வாசல் கதவை திறந்துவிட்டு மிருதுவான குரலில் வெல்கம் ஷெர்லி என்று அழைக்கிற சப்தம் கேட்டது,

இட் இஸ் மை ஸ்மால் கிப்ட் என்றபடியே ஷெர்லி கேக்கை முன்னால் நீட்டினாள், பிறகு என்னைப் பார்த்து புன்முறுவல் செய்தபடியே ஹெ இஸ் யுவர் லைப் மை சன் என்று கேட்டாள்

கிரேட் என்று சொன்னேன், அவள் தலையசைத்துவிட்டு மெதுவாக அப்பாவின் அறையை நோக்கி நடந்து போனாள், அம்மா கிச்சனுக்குப் போய் ஷெர்லிக்காகக் காபி தயாரிக்க ஆரம்பித்தாள், நான் ஷெர்லியிடம் பேச வேண்டும் என்று ஹாலில் உட்கார்ந்து கொண்டேன்,

ஷெர்லி அயர்ந்து கிடக்கும் அப்பாவின் அருகில் போய் அவரது கைகளை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள், நீண்ட நேரம் அவருக்காகக் கண்ணை மூடி பிரார்த்தனை செய்தாள், பிறகு யாரும் தன்னைப் பார்க்கிறார்களா என்று சுற்றிலும் திரும்பி பார்த்துவிட்டு அப்பாவின் காதருகே போய்ச் சொன்னாள்

பிரண்ட், எனது மகள் டோலி கருக்கொண்டிருக்கிறாள், நான் பாட்டி ஆகப்போகிறேன், இந்தச் சந்தோஷத்தை உன்னுடன் பகிர்ந்து கொள்வதற்காக வந்திருக்கிறேன், உனது மனம் இதைக் கேட்டுக் கொண்டிருக்கும் என்று எனக்குத் தெரியும், நீ என்னைப் புரிந்து கொண்ட ஒரு மனிதன்,

டோலி நேற்று இரவு என்னிடம் போனில் பேசினாள், பேசினால் என்பது கூடத் தவறு, அழுதாள், கர்ப்பிணியாக உள்ள தன்னோடு உடன் வந்து இருக்கும்படியாக அழைக்கிறாள், நான் மும்பைக்குப் போக இருக்கிறேன், ஒருவேளை இந்த ஊருக்கு நான் இனிமேல் திரும்பி வராமலே போகவும் கூடும், உன்னிடமிருந்து விடைபெறுவதற்காகத் தான் வந்திருக்கிறேன், மூன்று பிள்ளைகளை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் நின்ற நாளில் நீ செய்த உதவி தான் என்னை வாழ வைத்திருக்கிறது, நீ ஒரு உன்னதமான மனிதன், நீ செய்த நன்றியின் அடையாளமாக உன்னை ஒரு முத்தமிட விரும்புகிறேன், என்னை மன்னித்துவிடுங்கள் என்று குனிந்து உறங்கும் அப்பாவின் தலையில் அவள் முத்தமிட்டுவிட்டு கசியும் கண்களைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தாள், பிறகு விடுவிடுவெனப் படி இறங்கி வெளியே போகத் துவங்கினாள்,

அம்மா காபி கொண்டுவருவதற்குள் ஷெர்லி போயிருந்தாள், எங்கே ஷெர்லி எனக்கேட்ட போது இப்போது தான் போகிறாள், என்றேன் அவளைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை விசித்திரமான பெண் என்று அம்மா சொன்னாள் நானும் தலையாட்டிக் கொண்டேன்

அம்மா அவள் கொண்டுவந்த கேக்கை பிரிட்ஜில் எடுத்து வைக்கும்படியாகச் சொன்னாள்

நான் ஷெர்லியின் கேக்கை பிரித்த போது அதில் Goodbye friend என்று அழகாக வெண்ணிற கிரிமீல் எழுதப்பட்டிருந்தது, அதைப் பார்த்தபோது என்னை அறியாமல் கண்கள் கலங்கியது, ஷெர்லி அடிக்கடி சொல்லும் ஸ்ரேஞ்ச் என்ற சொல் ஏனோ மனதில் வந்து போனது



# அவளின்றிய வெறுமை!



சாலையிலே நீ
சேலையுடன் நடக்கையிலே
பூஞ்சோலையென நம்பி
ஏமாந்த வண்டு போல்..!

தினமும் வதைபட்டே
நான் வாழ வலிக்குதடி...!
வாய்க்காத எதோ ஒன்றை
வசப்பட எண்ணி மனமும்
ஏங்குதடி...!!!

சிக்கல்களை பின்னிக்
கொண்டு சிலந்திப் பூச்சியாய்
சிறைவாசம் கொண்டேன்
உனக்காய்...!

தொலைந்து போனது
வாழ்க்கை என தெரிந்தும்
தொலைதூர பயணமாய்
வாழ்க்கை நகருது..!

எப்போதும் சின்னுங்கி
கொண்டு இருக்கும்
கைபேசி இன்று எங்கோ
ஒரு முலையில்
முடமாகி கிடக்கிறது.....!

உந்தன் உள்ளுணர்வு
நூலில் ஊஞ்சல் கட்டி
ஆடத் தெரிந்த எனக்கு,
மனதைக் கட்டியிழுக்க
காரணக் கயிறு கடைசி வரை
கிடைக்கவில்லை.,,,,,!

பித்தம் கொண்டே அலைகிறேன்
உன்னால் பிதற்றலும் தொற்றிக்
கொள்ள காண்போர்க்கு ஏது
மொழிவேன் பெண்ணே ??

வார்த்தைகள் தடுமாறி
வாய் ஊமையான
போது....... ,
மவுனமாய் இரு,
அவள் ,
பிரிதலுக்கான விளக்கம்
எதுவும் தேவை இல்லை,
உன் காதலைச் சொல்ல
எந்த வார்த்தைக்கும்
தகுதி இல்லை

என்றோ ஒரு
நாள் போகும் உயிர்
இன்று போனால் என்ன
என்று கேட்கும் மனது...

இவை எல்லாம் முற்று
பெறும் ஒரு
நாள் எனிலும்,,,,!

'நீ
என் கனவுகளில்
சரி தொடர்ந்து
வருவதாக உறுதி
கொடுத்தால்....!

உறக்கத்திற்கான
என் சிறந்த தெரிவாக
கல்லறையே இருக்குமடி...! '

## விதுர விழிகள்

# காலச்சக்கரம்

நில்லாமல் ஓடும் நிரந்தர விளையாட்டுக்காரி
சொல்லாமல் சுணங்காமல் காரியமாற்றுபவள்
இல்லாதது இருப்பது என்ற வேறுபாடறியாள்
பொல்லாதது என சொல்பவரையும் ஏற்பாளே

கெட்ட பெயரும் கிட்டும் நல்ல பெயரும் வரும்
பட்டப் பெயராய் பொற்காலம் கேடுகாலமென்பர்
திட்டமிட்டபடி செய்ய இயலாதவர் பழியுரைப்பர்
வட்டமடித்துத் திரும்ப வராததுதான் கொடுமை

வசந்த காலம் வலம்வரும் காதலர்க்கு இனிதாம்
கசந்த காலமோ தோல்வியில் உழல்பவர் ஏசவே
அசராது ஓடுபவர் காலத்தோடு ஓடலாம் மகிழ்வே
மசமச என சோம்பல்கொண்டோர் பின்தங்குவரே

காலம் பொன்னைவிட மதிப்புமிக்க மாணிக்கம்
கோலம் மாறாது கொள்கையில் பிடிப்பானதது
ஞாலமே காலத்தைச் சார்ந்தே நடைபயில்கிறதே
பாலமாய் காலச் சக்கரத்தை இயக்கி விடுகிறதே

ஒவ்வொரு நொடியும் உன்னதமான புகழேணி
அவ்வொரு நொடி போனால் மீண்டு அது வராதே
வெவ்வேறு காலங்கள் விரைந்தே போய்விடுமே
ஒவ்வாத செயல்கள் செய்யாது கூட நடப்போமே

நல்லன செய்து நலம்பெற கொடுத்துதவி உலகில்
அல்லன நீக்கி அன்புலகில் அரவணைப்போடு
இல்லறம் நடத்தி இன்பம் காணலாம் காலத்தோடு
சொல்லறம் கொண்டு சிறப்பாக்குவோம் காலத்தை.

ராம்க்ருஷ்

# பனிமலையில் பிறந்தவளோ?

பளபளக்கும் பாவையிவள்
பாதரசத்தில் குளித்தவளா?
படபடக்கும் விழிகளோடு
பனிமலையில் பிறந்தவளா?

கூந்தலில் மல்லிகையைக்
குடியிருக்க வைத்தவளே!
காந்தமானக் கண்களிலே
கவர்ந்திழுக்கும் கனிச்சுளையே!

பாவாடைத் தாவணியில்
பருவத்தைக் கட்டிவைத்து
பூவாசம் வீசுகின்ற
புதுப்பெண்ணும் நீதானோ?



கண்ணாடி பார்க்கின்ற
கன்னியுந்தன் பார்வையிலே
முன்னழகு எல்லாமே
முழுமையாய்த் தெரியுதடி!


உன்மார்பில் ஊஞ்சலாடும்
ஒற்றைமணி ஆரமுமே
பெண்பார்க்க சொல்லுதடி
பேரழகை அள்ளுதடி.

பால்குடத்தில் நீந்திவரும்
பனிநிலவாய் நீயிருக்க
சேல்விழியின் துணையோடு
செகமுழுதும் ஆள்பவளே!

**கவிஞர். அ. முத்துசாமி**, தாரமங்கலம்.

# நிலம் பூத்து மலர்ந்த நாள்

புத்தக விமர்சனம் **எ.ஷபி**
(குறும்பட இயக்குநர்)




நிலம் பூத்து மலர்ந்த நாள் வெறும் வாசிப்பல்ல என் அணுக்களின் ஆழமான நினைவுகளில் உறைந்து கிடந்த ஆதி நிலத்தின் குடிமகனை சிலிர்ப்புடன் உணர்த்திய தருணம், சுவாரசியம் நிறைந்த காலத்தின் பாதைகளற்ற பாதையில் செல்லும் பயணம்.

பல்லாயிரம் வருடங்களாக இந்த நிலமானது பல்வேறு மாற்றங்களை ஏற்றுக்கொண்டு மாற்றத்தின் எச்சமாய், ஒரு மௌன சாட்சியாய் உறைந்த மோனத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. ஏனோ தற்போது நடக்கும் நிகழ்வுகளும், மாற்றங்களும் அந்த நிலத்தினால் ஏற்றுக்கொள்ள முடியாததாய் இருக்கிறது. எங்கும் பேரழிவின் முரசொலி பலமாய் கேட்கத் துவங்கியுள்ளது. நிலத்திற்கு, எப்போதும் எந்த கேடுமில்லைதான், ஆனால் அது தன் ஆதிக் குழந்தைகளை நினைத்து கவலைப்படுகிறது. அவர்களுக்கு தெரியுமா இது வெறும் நிலமல்ல பெரும் பண்பாடுகளை வாழ்வியல் ஒழுக்கங்களாய் கடைப்பிடித்த சமூகம் வாழ்ந்த நிலமென்று?.

நிலம் பூத்து மலர்ந்த நாள் உருவாக்கமே எத்தனை அழகாக இருக்கிறது, இந்த நிலத்தின் வரலாற்றை சரியான புரிதலோடு அணுகி, பாரியையும், ஔவையையும், எங்கும் நிழல் பரப்பிக் கிடந்த மரங்களையும், பறவைகளையும், நடந்து திரிந்த குடிகளையும் காட்சிப் படுத்திய மனோஜ் குரூர் ஒருவேளை தமிழ் நாட்டில் பிறந்திருந்து தமிழ் மொழியில் இந்த நாவலை எழுதியிருந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது மொழிபெயர்ப்பாளர் கே. வி. ஜெயஸ்ரீயின் மொழிபெயர்ப்பு. மொழிபெயர்ப்பு போன்றே தெரியவில்லை தமிழில் வெளிவந்த

நாவலாகவே மொழிவன்மையுடன் இருக்கிறது. மிகுந்த பொறுப்புடன் வெகு சிரத்தையாய் நாவலாசிரியரும்,மொழிபெயர்ப்பாளரும் உழைத்திருக்கிறார்கள்.

வாழ்தல் நிமித்தம் நிலம் பெயர்தல் இன்றுவரை எங்கோ தினமும் நடந்து கொண்டேதான் இருக்கிறது, பாணர்கள் நடந்து செல்லும் வழியெங்கும் விரியும் காட்சிகள், எதிர்ப்படும் பயணிகள், விரிந்து படரும் நிலமெங்கும் வஞ்சனையின்றி இயற்கை பச்சை விரித்து குடைகளுக்கிடையே வண்ணங்களை வாரியிறைத்திருக்கிறது, அறியாப் பூக்களும் அதன் வாசனையும், பகிர்ந்துண்னப்பட்ட இறைச்சியின் சுவையில் மனமும் வயிறும் நிரம்ப நிலவின் கூரைக்கு கீழே உறங்கும் மற்றொரு வாய்ப்பு மீண்டும் கிடைக்காதா என ஏங்க வைத்துவிட்டது நிலம் பூத்து மலர்ந்தநாள்.


கதைகளால் நிரம்பிக் கிடக்கும் ஒரு தேசத்தில் கதைகளுக்கா பஞ்சம் ஏற்படப் போகிறது நமக்கெல்லாம் வாழ்வே கதைகளுடன் பின்னப்பட்டுத்தானே கிடக்கிறது. எது நிஜம்? எது பொய்? என பிரித்தறிய முடியா கதைகளின் தேசத்தில் இருக்கிறோம். கொற்றவை, இறைவி, கண்ணகி இன்னும் எத்தனை வடிவங்களில் நாம் அழைத்தாலும் அனைவரும் ஒன்றுதான் சங்க இலக்கியமும், நவீன இலக்கியமும் இணையும் புதிர் இந்த நாவலின் இறுதி. இன்று உலகம் முழுக்க நாம் தமிழர் என்பதில் பெருமை கொள்வோம், இணைவோம் என வலுவாய் குரல்கள் ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது, தமிழர் பெருமை பண்பாடு என நிறைய குறிப்புகள் வந்து குவிகிறது. அதில் பாதியளவு நாம் கடைபிடித்திருந்தாலும் அல்லது அறிந்திருந்தாலும் இறைவனையும், இறைச்சியையும், மதத்தினையும் முன்னிறுத்தி நடக்கும் தற்கால முட்டாள்தனங்களும் நடக்காது, பாணர்கள் ஆயர் குடில் முதல் வழியில் எதிர்ப்படும் அனைத்து குடில்களிலும் விருந்தோம்பல்களால் நெக்குருகிப் போகிறார்கள், எல்லாக் குடில்களும் மஞ்சள் ஜுவாலைகளின் வெளிச்சத்தில் பேரன்பினால் நனைந்து கிடக்கின்றது. இறைச்சியும், வேட்டையும், குழு வாழ்க்கையும், இரவுக் கூத்தும், நாம் இதுவரை கண்டிராத ஒரு கொண்டாட்டமான சமூகத்தை நமக்கு அறிமுகம் செய்கிறது.நாம் ஒரு பண்பட்ட சமுதாயத்தின் நீட்சி அவ்வளவே. அடுக்கப்பட்ட அறைகளின் சுவர்கள் நாகரீகம் என இத்தனைநாள்




*காற்றில் தெறித்த ஓர்கனவு*
*கவியாய் சிறகை விரித்ததுவே*
*மாற்றம் ஒன்றே மாறாது*
*மலையும் கடலும் மாறாது*
*தோற்றம் பொலிவும் மாறிவிடும்*
*தூயசிந்தையில் மாற்றமில்லை*
*ஆற்றல்மிக்க கவிநூலை*
*அணியாய் தமிழில் படைத்தவரே*
*சீற்றம் கொண்டு சமுதாயம்*
*சீர்கேடாக போவதற்கு*
*ஏற்றம்கொள்ள கவிநூலை*
*இலக்கண மரபில் கூறிவிட்டீர்*
*நேற்றும் இன்றும் நாளையென*
*நிலையாய் உந்தன் புகழிருக்கும்*
*போற்றும் மரபில் போற்றுகிறேன்*
*புகழில் ஓங்கி வாழியவே.*

*இராமதாசு காந்தி*

**இந்நூல் தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்:**
email: editor@tamilnenjam.com




நூல் அறிமுகம்

இலங்கை என்றாலே நம் நினைவுக்கு வருவது புத்தமதமும் இனப் பிரச்சினையும்தான். ஆனால் இன்றைய இலங்கை சுமார் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தனித் தீவல்ல, இந்தியாவின் நீட்சியாகவே இருந்தது.

அப்படியானால் சிங்களவர் யார், அவர்களின் பூர்வீகம் என்ன, எங்கிருந்து சென்றார்கள் போன்ற வினாக்களுக்கு பக்தவத்சல பாரதியின் இந்நூல் சமூக-பண்பாட்டு மானிடவியல் நோக்கில் விடையளிக்கிறது.

இந்த புத்தகம் தேவைப்படுவோர் அழைக்கவும் 8489401887.
VPP அல்லது India Post மூலம் புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும்...
Now WhatsApp No +91 8489401887... get any Tamil books.

இலங்கையில் சிங்களவர்
இந்திய இனத் தொடர்ச்சியும்
தென்னிந்தியப் பண்பாட்டு நீட்சியும்

ரூ.160

அடைபட்டு அறைகளுக்குள்ளேயே மூச்சுத் திணறி கொண்டிருக்கும் என் வாழ்வும் பாணர்களின் அலைக்கழிப்பும் ஒரு கணம் ஒன்றோ என எண்ணத் தோன்றியது.

ஒரு சில படைப்புகள்தான் புதிர்களுக்குள் ஒளிந்து கிடக்கும் கண்ணிகளை இணைப்பது போல் வாசிப்பின் கண்ணிகளை வாழ்வோடு இணைத்துவிடும், எனக்கு நிலம் பூத்து மலர்ந்த நாள் அப்படித்தான். இயற்கையை வணங்கி, நன்றி தெரிவித்து, அனைத்து உயிர்களையும் ஒன்றாய் கருதி அதனதன் இருப்போடு இணைந்த வாழ்வியலில் நடைபெற்ற வஞ்சம், சூழ்ச்சி, பகை, நட்பு, காதல், இருப்பு, தேடல், ராஜ தந்திரம், கூத்து என அத்தனை நிகழ்வுகளையும் வாழ்ந்து பார்த்த உணர்வை அளிக்கிறது. பல்வேறு கதாபாத்திரங்களின் பார்வையில் நகரும் கதை சித்திரை, மயிலன், கபிலர், மகீரன், அவ்வை, சந்தன், நன்னன், கொலும்பன், சீரை, பாணர் என அனைவரோடும் ஒரு நீண்டகாலப்பயணம் போய் வந்த உணர்வே மேலோங்கி நிற்கிறது. பூக்களே அறியா காலத்தில் இந்த நிலம் பூத்து மனதை நிறைத்திருக்கிறது.

எல்லா படைப்பும் ஏதோ ஒன்றை நமக்கு உணர்த்தவே நம்மைத் தேர்ந்தெடுக்கிறது, நான் இதுவரை வெகுவாய் கவனம் செலுத்தாத சங்க இலக்கியத்தின் வாசிப்பை எனக்குள் நிலம் பூத்து மலர்ந்த நாள் விதைத்திருக்கிறது. ஒரு தேர்ந்த படைப்பு மட்டுமே வாசிப்பை மேம்படுத்தும்,நம் கவனத்தைக் கோரும் இந்த நாவலும் அப்படித்தான். மனோஜ் குரூர் படைப்பின் நேர்மையோடு எந்த தயக்கங்களும் இன்றி நம்மை மார்போடு தழுவிக் கொள்கிறார். நிலம் பூத்து மலர்ந்த நாள் தாய்மடியின் வெம்மை.

நிலம் பூத்து மலர்ந்த நாள்
(நாவல் – மலையாளம்)
மலையாளம் : மனோஜ் குரூர்
தமிழில் : கே.வி. ஜெயஸ்ரீ
வம்சி புக்ஸ், திருவண்ணாமலை.
தமிழ்நாடு, இந்தியா.
மே 2016. பக்கம் 312. விலை 250.
செல்: 9445870995, 04175235806

# ராஜாவுக்கு ராஜா நீ...



- இசைவாசி

இறைவன், அரசன், வேந்தன், தலைவன், அண்ணல், கோ என்று பல பெயர்களில் மன்னனை சங்ககாலத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரிந்த ஒன்றுதான். கற்கால மனிதனின் வாழ்க்கை விவசாயத்தை நோக்கி நகரும் போது நிலவுடைமை சமுதாயம் தோன்ற ஆரம்பித்தது. நிலவுடைமை என்றால் ஆற்றங்கரை ஓரமாக விவசாயம் நல்ல முறையில் நடைபெறும். அதற்காக தனக்கு வேண்டிய நிலங்களை தனதாக்கி கொண்டு சொந்தம் கொண்டாடுவது நிலவுடைமையாகும்.

அது ஐந்திணையாக மாறிய போழ்தினில் அந்நில மக்களுக்கு போதனை வழங்குவதற்கும் சிக்கல்களைக் கலைவதற்கும் தீர்வுகளைக் கூறவும் ஆள் தேவைப்பட்டது. மிகச்சரியாக வழிநடத்துபவனை தலைவனாக வணங்கினார்கள். அப்படி தலைவனாக இருந்தவனுக்கு பொது மக்களால் சலுகைகள் வழங்கப்பட்டன. பிறகு என்ன சொகுசு வாழ்க்கை அவனுக்குச் சோம்பேறித் தனத்தையும் நானே தலைவன் என்கிற பதவி ஆசையும் கொடுத்து விட்டது.

நாட்கள் செல்ல செல்ல அவ்வாசை பலபேர்க்கும் முளைத்ததன் விளைவால் தேர்தல் வைக்கப்பட்டது. குடை ஓலை முறையில் தேர்;தல் நடந்ததாக சிறு வகுப்பில் படித்திருக்கிறோம். மக்களுக்குப் பிடித்தவன் மன்னனாக அரியணை ஏற முடிந்தது. நிலவுடைமை சமுதாய ஆட்சி மன்னர் ஆட்சியாக தோன்றிய பொழுது மக்களுக்குப் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டன. மன்னன் முதலில் மனிதனாக இருக்க வேண்டும். ஆனால் நாட்டின் எல்லையைப் பெருக்க போர்களும் நாட்டின் கஜானாவைப் பெருக்க வரிகளும் தனது உறவினர்கள் ஆடம்பர வாழ்வை அனுபவிக்க அடிமைகளை ஏற்படுத்துவதுமாக மன்னனின் மனம் நஞ்சாகியது. சுய நலக்காரனானான். அடக்கி ஆள்பவனாகவும் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்பவனாகவும் இருந்ததால் அவன் மன்னன் ஆவதற்கு தகுதியற்றவனானான். பதவியால் மனிதன்

உயர்வதில்லை. உயர்ந்த மனிதனால் அப்பதவி உயர்கிறது என்பதே இயற்கையின் நியதி. இந்தக் கருத்தை பதவிக்காக வாழ நினைப்பவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். “வையத் தலைமை கொள்” என்பான் பாரதி. நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு சமுதாய மாற்றத்தை கொண்டுவர இளைஞர்கள் முன்வர வேண்டும். தனக்காகக் குடும்பத்தை அமைத்துக் கொள்ளாமல் இந்திய சமுதாயத்தை குடும்பமாக நினைத்து இறுதி சடங்கிற்கு கூட வாரிசு இல்லாமல் மறைந்து போன நல்ல தலைவர்களை அவர்களின் நினைவு நாளில் மட்டுமே நினைத்துப் பார்க்கிறோம்.

அவர்களின் நற்பண்புகளை கடைப்பிடிகக மறந்து விட கூடாதல்லவா!

பதவி ஆசை
இல்லாதவர்கள் தான்
அப்பதவிக்குத்
தகுதி உடையவர்கள்...
இசைவாசி



பிரதமர் என்கிற பதவியை விடவும் ஆசிரியர் என்கிற பணியே சிறப்பானது என பதவியை ஒதுக்கியவர் லால்பகதூர் சாஸ்திரி. பிரதமராகும் வாய்ப்பிருந்தும் இளைஞர்கள் நாட்டை ஆள்வதுதான் நன்றாக இருக்கும் என்று இரண்டு முறை இந்திய பிரதமர்களை உருவாக்க ஆலோசனை வழங்கி பதவியைப் பெரிதாக நினைக்காதவர் காமராஜர். இரண்டாவது முறை குடியரசு தலைவர்க்கு வாய்ப்பிருந்தும் அதை மறுத்துவிட்டு மாணவர்களோடு உரையாற்றுவது போதும் என்றெண்ணி இறுதி காலத்தை கழித்தவர் கலாம் அவர்கள். இவர்களைப் பெற்றபோதெல்லாம் அப்பதவிகள் பெருமை பெற்றன. பொது நலம் கொண்டவர்களுக்கு சரித்திரம் நிலையான பதிவைக் கொடுக்கிறது என்பதை இளையோர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இஞ்ஞாலத்தில் தன்பெண்டு தன்பிள்ளை தானென்று நினையாமல் பொது நலத்தைக் கருத்தாய் கொண்ட பல்வேறு நல்ல மனிதர்களைக் கண்டிருக்கிறோம். “வரலாறு என்பது நேற்று இறந்தோர்க்கும் இன்று இருப்போர்க்கும் நாளை இருப்போர்க்கும் இடையே உள்ள தொடரிணைப்பு உறவு” என்கிறான் அயல்நாட்டு வரலாற்று அறிஞர் எட்மண்பர்க்.

எல்லா மனித்கர்களுக்கும் ஒரு பிணைப்பை ஏற்படுத்துகிற வரலாற்றில் பெயர்சொல்கிற அளவிற்கு வாழ்ந்த பெரியவர்களின் காலத்தில் ஏதும் செய்யாமல் ஏனோ பிறந்து வாழ்ந்து முடித்தவர்களை நாம் நினைப்பது இல்லை. பிறருடைய ஒத்துழைப்பு இல்லாமல் யாருடைய வாழ்க்கையும் நிறைவு அடைவது கிடையாது என்பது உண்மையானால் பிறருக்காக வாழ்ந்தவர்களை நாம் மறக்க மாட்டோம் என்பது உண்மை. அவர்களைத்தான் நாம் ‘செயற்கரிய செய்வார் பெரியர்’ என்று போற்றுகிறோம்.

போராளி! என்ன ஒரு வீரியம் போராளி என்கிற வார்த்தைக்கு. போதுந்டா சாமி என்று பாதியில் நின்று விட மாட்டான் உண்மை போராளி. அவனுக்குள் இருக்கும் உறுதி அவனை எப்படி ஆற்றலோடு வாழ வைக்கிறதோ அவ்வாற்றல் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் வேர்விட்டு விருட்சம் அடைந்தால் எல்லோருடைய வாழ்க்கையும் ஒரு வரலாறு வரைந்து விடும்.

மரணத்தைப் பற்றி எண்ணம் எந்தவொரு போராளிக்கும் வந்து விட்டால் அத்தகுதியை அப்போராளி இழந்து விடுவான். சிலருடைய வாழ்க்கையின் தியாகம்தான் பலருக்கு இனிமையான வாழ்க்கைகைத் தந்திருக்கிறது. ஆப்பிக்கா கருப்பின மக்கள் இயந்திர மனிதனாகக் கருதபட்டு கடுமையான வேலையைச் செய்ய மட்டும் அவர்களை அடிமையாக வைத்திருந்து அடிப்படை உரிமை கூட கொடுக்கப்படாமல் சித்ரவதை அனுபவிப்பதை பார்த்து சும்ம இராமல் எதிர்த்துக் குரல் கொடுத்தார் நெல்சன் மண்டேல. 25 ஆண்டுகாலங்களுக்கு மேலாக சிறைச்சாலையிலேயே தன்னுடைய வாழ்நாளை அனுபவித்து ஆப்பிரிக்க கருப்பின மக்களுக்கு



சுதந்திரம் வாங்கினார். நினைத்து பார்க்கவே மனம் வலிக்கும். நமக்கும். நம்முடைய ஆயுளை இப்படி அடகு வைக்க ஆயத்தமாகுவோம்?

பிளேக் நோய் தொற்றுநோய் என்று அஞ்சிக் கொண்டிருந்த காலத்தில் அந் நோயால் இறந்தவர்களின் சடலத்தைக் கூட அப்புறப்படுத்த ஆட்கள் முன்வராத நேரத்தில் கருணை இதயத்தோடு புதைத்தார் பெரியார். செயற்கரிய செயலைச் செய்ததால் அவர் நம் மனதில் நிற்கிறார். பொது நலத்தொண்டு செய்து வாழ்ந்த தெரசா மார்டின் என்னும் சமூக ஆர்வலரின் பெயரைத் தன் பெயராக மாற்றிக் கொண்டார். ஆக்னஸ் கொன்சாக பொசாக்யு. அவர்தான் அன்னை தெரசாவாக மாறினாள். ஒருவருடைய பொது நலத்தொண்டு இன்னொருவனை பொது நலமாக வாழ வைத்து விடுகிறது.

தலைமைப் பண்பு மாணவர்களுக்கு வளர்த்து விட வேண்டிய பண்பாகும்.

*கணவன் - மனைவிக்கு இடையே நடந்த சண்டையின் போது:-*

*கணவன்:*
*உன்னைப் பார்த்து நான் பயப்படறேன்னு நெனச்சுடாதே!...*

*மனைவி:*
*பொய் சொல்லாதே... என்னைப் பொண்ணுப் பாக்க வரும்போது 6 பேரோட வந்தே!...*

*நிச்சயம் பண்ணும் போது 100 பேரோட வந்தே!!...*

*தாலி கட்டும் போது 500 பேரை கூட்டிட்டு வந்தே!!!...*

*ஆனா, கல்யாணத்துக்கு அப்புறம் நான் உன் வீட்டுக்குத் தனியாவே வந்திருக்கேன் பாத்தியா!...*
*இப்ப புரியுதா யாரு ‘‘தைரியசாலி’’ ன்னு...*

*கணவன்: !!!.*

## கண்ணம்மா

*நின்முகத்தில்*
*என்னொளியே கண்ணம்மா*
*நின்சிரிப்பில்*
*என்சுரமே கண்ணம்மா*
*நின்னசைவில்*
*என்கரமே கண்ணம்மா*
*நின்விழியில்*
*என் ஈர்ப்பே கண்ணம்மா*
*நின்னையிலும்*
*எம்மை தழுவுகையில்*
*பட்டொளியில் உளியின்*
*பட்டவலியும் மறையுதே!*
*கண்ணம்மா கண்ணம்மா!*

**ஸ்டெல்லாமேரி எம் ஜே**

வ.உ.சிதம்பரனார் குழு தயார். பகத்சிங் குழு தயார் இறைவழி பாட்டின்போது குழுக்களாகப் பார்க்கப்பட்டு மாணவர்கள் வரிசையாக நின்று கொண்டிருப்பார்கள். அக்குழுவின் தலைவன் ராணுவீரனைப் போல சல்யூட் அடித்து தனது குழுவின் பெயரைப் பதிவு செய்வான். சல்யூட் அடிக்கும் குழுத்தலைவன் வராத போது சல்யூட் அடிக்க மற்ற மாணவர்கள் ஆசைகொள்ளவார்கள். நல்லா படிக்கும் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து படிக்காத மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வைப்பார் ஆசிரியர். இந்த இடத்தை பிடிக்க மாணவர்கள் நல்லா படிப்பார்கள்.

பள்ளிக் கூடத்தில் வைக்கப்பட்ட செடி கொடிகளுக்கு தண்ணீர் ஊற்றி வளர்க்க குழுவை ஏற்படுத்தி தலைவனை நியமிப்பார். இத்தலைமை பண்புதான் எதிர்காலத்தில் மாணவர்களை நிர்வாகத் திறமையோடு வாழ வைக்கிறது. பள்ளிக்கூடத்தில் கொடுக்கப்படும் தலைமை பொறுப்பு நாட்டை ஆளும் பண்பை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை.

மன்னனைப் பாட சொன்னபோது ஔவை 'வரப்பு உயர்க' என்றாளாம். வயல்காடுகளின் வரப்பு உயர்ந்து இருக்க வேண்டுமென்றால் மழை பொழிய வேண்டும் மழை பொழிந்தால் விவசாயம் பெருகும். விவசாயத்தால் ஏகபோக அறுவடையைப் பெற்று குடி மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்வார்கள். நாட்டில் மகிழ்ச்சி பெருகும் போது களவு சூது சோம்பல் இல்லாத நாடாக மாறும். அவ்வாறு விளங்கும் நாடே மன்னின் புகழாகும். ஆகையால்தான் 'வரப்பு உயர்க' என்ற ஒற்றைச் சொல்லிலேயே மன்னனை புகழ்ந்தாள் கொல்லுப்பாட்டி.

குடிமக்களின் நலத்தை பற்றி டீக்கடை பெஞ்சில் உரையாடி கொண்டிருக்கும் அத்துனை பேருக்கும் எப்படி நாட்டை வழி நடத்த வேண்டும் என்ற வழிமுறை தெரிந்திருக்கும். அரசியலின் விமர்சனங்கள் அங்கு பகிரங்கமாகப் பேசப்படும்.

மன்னன் தவறு செய்தால் அதைச் சுட்டிக்காட்டி மன்னனை உணர வைக்க 'எண்பேராயங்குழு' இருந்தது. அதிலுள்ள 'மாசனம்' என்கிற சான்றோர் குழுவின் வார்த்தையை மன்னன் மதித்தான். அவர்களின் அறிவுரையில் உண்மை இருப்பதை கண்டு அதன்படி சட்டம் இயற்றுவான். ஆராய்ச்சி மணி முறையை நாம் அறிந்திருக்கிறோம். ஆராய்ச்சி மணி ஒலிக்கும் போதெல்லாம் ஏதோ குற்றம் நடந்து விட்டதுபோலும் என்று மன்னன் அதன் குற்றத்திற்கான விசாரணையை தீவிரமாக நடத்தி அதற்கான தீர்வை உடனே



வழங்குவான். அதன் பிரதிபலிப்பு தற்போது உள்ள அரசு அலுவலகங்களிலும் தனியார்

நிறுவனங்களிலும் வைக்கப்பட்டிருக்கும் புகார் பெட்டிகள். புகார் பெட்டிகள் புகார்கள் தூங்கும் பெட்டியாக இருப்பது வேதனைக்குரியது. யார்க்கும் தெரிய கூடாது என்றுதான் புகார் பெட்டிகளை வைக்கிறோம். ஆனால் வீணர்கள் சிலர் யார் புகார்; அளித்தத்து என்று தெரிந்து கொள்ள நேரத்தை செலவழிக்கிறார்கள்.

நீதிக்கு நிதி கொடுத்து திதி செய்து விடும் தேச துரோகிகளால் நாடு எப்படி சுபிச்சம் அடையும். கடமையை துஷ்பிரயோகம் செய்யும் யாரையும் எவரும் மதிப்பதில்லை.

கலாம் ஐயா அவர்களை பேசுவதற்கு அழைத்தால் இரண்டு கேள்வியினை கேட்பார். நான் பேச போகும் இடம் பள்ளிக்கூடமா? கல்லூரியா? இந்தக் கேள்விக்கு சரியான பதில் கிடைத்தால்தான் அங்கு பேச செல்வார். ஈரோடுக்குப் பக்கத்தில் ஒரு கல்லூரியில் பேசுவதற்காக தேதி கொடுத்தார். அதற்கான ஏற்பாடுகள் ஆடம்பரமாக நடந்தது. இரண்டு அரங்குகள் போடப்பட்டது. ஒன்று முக்கிய பிரமுகர்கள் அமர்வதற்கான நிறைய செலவுகள் செய்யப்பட்ட ஆடம்பர அரங்கு. இங்குதான் அவர் பேச வேண்டும். இன்னொன்று மாணவர்கள் அமர்வதற்கான சாதாரண அரங்கு. மாணவர்கள் அமரும் அரங்கில் கலாம் பேசுவதை பார்க்க திரை அமைக்கப்பட்டது.

பேசுவதற்கு வேகமாக மேடையேறிய கலாம் ஐயாவிற்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. அந்த மேடையில் ஐயா இரண்டு நிமிடம் மட்டும் பேசிவிட்டு ‘என்னுடைய நண்பர்கள் அங்கே இருக்கிறார்கள். நான் பேச வேண்டிய மேடை இதுவல்ல. என் மேடை அங்கே இருக்கிறது என்று சொல்லி மாணவர்கள் அமர்ந்து கொண்டிருந்த அரங்கிற்கு சென்றார்.

ஈரோடு புத்தகத் திருவிழாவில் ஆட்சியாளை தேர்வில் தேர்ச்சி பெற்ற இரண்டு இளம் ஆட்சியாளர்களுக்கு பாராட்டு விழா நடந்தது. அதில் ஒருவர் சொன்ன தகவல்தான் மேற்சொன்னது.

“நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி, சின்னஞ்சிறு கைகளை நம்பி ஒரு சரித்திரம் இருக்குது தம்பி” ஒரு படத்தில் எம்.ஜி.ராமச்சந்திரன் பாடுவார். இந்தத் தலைமுறைதான் வளரும் இந்தியாவின் பரம்பரை. ஆனால் நாம் பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் அரசியலைப் பற்றி விழிப்புணர்வைக் கொடுக்கிறோமா? ஏன் பாடத்தில் அரசியலைப் பற்றி பேசுவதே இல்லை. 11 வயதில் தி.க கழக மேடைகளை அலங்கரித்தும் அதன் கொள்கைகளைப் பேசியும் வந்தவர் கி.வீரமணி ஐயா அவர்கள். தகவல் தொடர்பு அதிகம் இல்லாத காலத்திலேயே நாட்டைப் பற்றிய புரிதல் அவர்க்குக் கிடைத்திருப்பது வியப்பளிக்கிறது.

14 வயதில் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட சிறுவனை ஆங்கிலேய அரசு கைது செய்து நீதி மன்றத்தில் நிறுத்தியது. உன் பெயர் என்ன? நீதிபதி கேட்டார். என் பெயர் சுதந்திரம். உன் வீடு எங்கே இருக்கிறது? உன் முகவரி என்ன? என்ற போது நான் சிறைச்சாலையில் இருந்து வருகிறேன் என்றான். நாட்டின் குடிமகனாக இருக்க வேண்டும் என்றால் கூட 18 வயது நிரம்பி இருக்க வேண்டும். 18 வயது நிரம்பாத 14 வயது சிறுவனுக்கு 18 கசையடிகள் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு அடிக்கும் ஜெய்ஹிந் ஜெய்ஹிந் என்று சொன்னானே அச்சிறுவன் அவனுக்கு யார் விடுதலை உணர்வை நாட்டுணர்வை கொடுத்தது. அந்த நாட்டுப்பற்றை நாளைய மன்னர்களாக விளங்கும் இன்றைய இளைஞர்களுக்கு நாம் கொடுக்க கடமை பட்டிருக்கிறோம்.

நாளைய நாட்டின் தலைவனும் நீயே

நம்பிக்கை உண்டு வருவாயே... உன்னால் முடியும் தம்பி படத்தில் கமல்ஹாசன் பாடுவது போல இக்காட்சி அமையும். எல்லோருக்குள்ளும் தலைவனை இருக்கிறான். அவனை நேர்மையோடு உலவ விடுங்கள்.

மாணவர்கள்
இந்நாட்டு மன்னவர்கள்...
இசைவாசி



# சுண்டல்மாலையும், கல்யாணமாலையும்...

**பட்டுக்கோட்டை ராஜா**

இரவு மணி பத்தைக் கடந்திருந்தது. கணினியில் ஒரு பதிப்பகத்தார் கேட்டிருந்த அட்டைப்படத்தை வடிவமைத்துக் கொண்டிருந்த சிவாவுக்கு நேரம் ஓடியதே தெரியவில்லை. இனியும் தாமதித்தால் அப்பாவின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். அது அடிக்கடி நடப்பதுதான் என்றாலும் அவரிடம் திட்டு வாங்காமல் இருக்கவே மனசு விரும்பும். காரணம், அவர் தாயுமானவர்.

நாற்காலியை விட்டெழுந்து இடுப்பை வளைத்து நெட்டி முறித்தான். ஷட்டரை இறக்கிவிட்டுப் பூட்டினான். ஸ்கூட்டியை ஸ்டார்ட்டிக் கிளம்பினான்.

புறநகரிலிருந்த வீட்டுக்கு முன்னால் ஸ்கூட்டியை நிறுத்தியதும் வாசல் கதவைத் திறந்து அப்பா வெளிப்பட்டார். பாம்புக் காது அப்பாவுக்கு. ஒரே பிள்ளை என்கிற அக்கறை வேறு.

`ஏண்டா இவ்வளவு லேட்டு?' என்று எப்போதும் கேட்கிற கேள்வியை ஏனோ இன்று அவர் கேட்கவில்லை. கேட்டாலும் `கடையில் வேலை இருந்துச்சிப்பா' என்ற வழக்கமான பதில்தான் வருமென்கிற சலிப்பு ஒருவேளை காரணமாயிருக்கலாம்.

இவன் வீட்டுப் படியில் கால்வைக்கப்போனவேளையில் இவனுக்காகவே காத்திருந்த மாதிரி, எதிர்வீட்டு இனியா பதற்றமாய் ஓடிவந்தாள்`` உங்களால ஒர் உதவி ஆகணும்... செய்ய முடியுமா, ப்ளீ!" என்று கெஞ்சும் தொனியில் கேட்டாள்.

வீட்டுக்கு எதிரில் அவள் குடும்பம் குடிவந்த நாளிலிருந்து இவனிடம் அவள் நேரே பேசிய முதல் வார்த்தைகள் இவைதான்.

இவன் அப்பாவைப் பார்த்தான். அவர் பதவிஓய்வு பெற்றுவிட்ட ஆசிரியர். இவனை அவருக்கு மகன் என்று சொல்வதைக் காட்டிலும், மாணவன் என்று சொல்வதுதான் சரியாயிருக்கும்.

அவர் கண்களில் அனுமதி தெரிவது போலுணர்ந்து இவன் உதடு பிரிக்கப் போன வேளையில், ``என்னம்மா வேணும்?'' என்று அவரே கேட்டுவிட்டார்.

``உங்க வீட்டுக்கு ஒரு ஆட்டோகாரர் வருவார்ல, அவரை உடனே வரச்சொல்லணும் சார்... சைக்கிளில் போன அப்பாவுக்கு ஆக்ஸிடெண்ட் ஆய்டுச்சாம்.. இப்பதான் ஃபோன் வந்திச்சு... `ஜி.ஹெச்'ல அட்மிட் பண்ணிருக்காங்களாம்..'.'

`எங்க வச்சிருக்காங்கன்னு சொன்னே?' அப்பா கேட்டார்.

`அரசாங்க மருத்துவமனையில்..!'

`அப்படி விளக்கமா சொன்னாத்தானே புரியும்!' நக்கலடித்த அப்பா இவன் பக்கம் திரும்பும் முன்பே ஆட்டோகுமாரை அலை பேசியில் அழைத்தான்.

தாமதமாகவே எடுத்த குமார், `என்னண்ணே, இந்த நேரத்துழ கூப்டுழீங்க?' என்று கேட்ட கேள்வியிலேயே சாராயவாடை வீசியது.

`குமார், கொஞ்சம் சீக்கிரமா வீட்டுக்கு வர முடியுமா?... எதிர்வீட்டு மாணிக்கம் அய்யாவுக்கு ஆக்ஸிடெண்ட் ஆய்டுச்சாம்.. உடனே கவர்மெண்ட் ஹாஸ்பிடல் போகணும்..'

`சரிண்ணே, இந்தா வர்றேன்' என்றான்.

இவன் அலைபேசியை அணைத்துவிட்டு, `வர்றேன்னு சொன்னான்' என்றான் இனியாவிடம்.

`ரொம்ப நன்றி சார்.' என்ற அவள் மணிக்கட்டு கடிகாரத்தைப் பார்த்தபடியே தன் வீட்டுக்குத் தவிப்போடு நடந்தாள்.

இவன் அப்பாவைப் பார்க்காமல் வீட்டுக்குள் சென்றாலும், அவர் கண்கள் தன்னையே பார்த்திருப்பதை முதுகில் உணர்ந்தான்.

கைகால் கழுவி விட்டு வந்து சாப்பிட உட்கார்ந்தான்..

அப்பா சாப்பாடு எடுத்து வைத்தார். வழக்கமாய் நிறையப் பேசுகிற அப்பா மௌனமாகவே உணவு பரிமாறியது ஆச்சர்யமாய் இருந்தது. என்றாலும், அவரின் மனஓட்டத்தை இவனால் படிக்க முடிந்தது.

இவனுக்கு அம்மா இல்லை. தாயுமானவர் அப்பாதான்.

சாப்பிட்டுவிட்டு வாசலுக்கு வந்த போது, எதிர்வீட்டு வாசலில் இனியா காத்திருப்பதைப் பார்த்தான். ஆட்டோ வரவில்லை போலும்!

போதையில் இருந்த குமாரோடு இனியாவைத் தனியே அனுப்புவது தவறு என்று மனசு சொன்னது. இவனே அவளை ஸ்கூட்டியில் அழைத்துச் செல்ல முடிவெடுத்து சட்டையைப் போட்டான்.

அப்பா கேள்விமனசோடு இவன் பின்னால் வந்தார்.

``அப்பா, ஆட்டோ இன்னும் வரலை...குமார் தண்ணியடிச்ச மாதிரி பேசினான்... நானே இனியாவை அழைச்சிட்டுப் போறேன். "முகம் பார்க்காது அப்பாவிடம் சொன்னான்.பதிலை எதிர் நோக்காமல் மோட்டார்சைக்கிளை ஸ்டார்ட் செய்து எதிர்வீட்டு வாசலை அடைந்தான். இனியா கேள்வியோடு நிமிர்ந்தாள்.

``உட்காருங்க போகலாம்" என்றான்.

முகத்தில் பரவிய நன்றியோடு அவள் பில்லியனில் உட்கார்ந்தாள். வாசலில் அப்பா நின்றிருப்பதைப் பார்த்தோ என்னவோ, இனியா என் தோளைப் பிடிக்க முயற்சிக்கவில்லை.

மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருந்தாலும் மாணிக்கத்துக்குப் பெரிதாய் அடி எதுவுமில்லை. முழங்கை, மற்றும் தாடையில் லேசான சிராய்ப்புகள்தான். டிங்க்சர் போட்டு பிளாஸ்திரி ஒட்டியிருந்தார்கள்.

``வாங்க தம்பி, கம்பெனிக்கு சைக்கிள்ல வந்தப்போ ஒரு டாக்ஸிக்காரன் இடிச்சிட்டான்... அவனே ஆஸ்பத்திரில கொண்டுவந்து சேர்த்திட்டு செலவுக்கு ஐநூறு ரூபாய் பணமும் கொடுத்திட்டுப் போய்ட்டான்!" என்றார்.

``இனியாதான் ரொம்பப் பயந்திட்டாங்க!" என்றிவன் சொன்னதும் இனியா இவனைப் பார்வையால் ஊடுருவினாள். தன்பெயர் இவனுக்குத் தெரியாதென்று நினைத்திருந்தாளோ என்னவோ? ஆச்சர்யம், மகிழ்ச்சி, நன்றி எல்லாமும் அந்தப் பார்வையில் இருந்தன.

மருத்துவமனை வாசலில் அப்பாவையும் மகளையும் ஓர் ஆட்டோ பிடித்து ஏற்றிவிட்டான்.



# முதியவரின் தனிமை

சுற்றியலைந்த ஊர்களின் வாசனை
இன்னும் நாசியில் தீராமல் இருக்கிறது,
ஓய்வில்லாமல் செய்த வேலைகளின்
நினைவுகள் மட்டுமே
எஞ்சியிருக்கிறது என்னிடம்.

பழகிய மனிதர்கள் அனைவரும்
மனதில் நிழலாடிக் கொண்டிருக்கிறார்கள்.
நானாக நானிருந்த காலநினைவுகள்
அலை புரட்டிய ஏடுகளாய் நிறைந்து
வந்து தங்கியிருக்கிறது நெஞ்சில்.

பழம் நினைவுகள் விஞ்சிய போதும்
சிதறிய இந்நாள் நினைவுகளை சாடும்
உறவுகளுக்கு உரக்க சொல்ல வேண்டும்,
சிதறியது மனதில் தங்கா வடிவங்கள்தான்
நினைவுகளின் படிமங்கள் அல்ல என்று.

மின்னிய பழம் பெருமையின்
மிஞ்சிய வெறும் நினைவுகளை
மாளாமல் பேசித் தீர்க்க
வேண்டும் ஒரு வெளி!

தொய்ந்த உடலும் தனிமையும்
சருகாக்கி எனைக் கொல்லாதிருக்க
வேண்டும் ஒரு வெளி!

தான்மட்டும் மோட்டார் சைக்கிளில் கிளம்பினான்.

இனியா கிட்டத்தில் வந்து ``தேங்க்ஸ்" என்றாள் காதோடு. அந்த ஒரு வார்த்தை இவன்செவியில் தேன் பாய்ச்சியது.

இவன் வீட்டுக்குள் நுழைந்ததும் அப்பா கேட்ட முதல் கேள்வி, ``சிவா, அடி பலமா?" கேள்வியில் இருந்த நக்கல் புரிந்தது.

இவன் சுதாரித்துக் கொண்டான் ``இல்லப்பா, லேசான சிராய்ப்புதான்!"

அப்பாவின் அடுத்த கேள்வி`` விழுந்தது யாரு?"

``இனியாவோட அப்பாதாம்ப்பா... டாக்ஸிக்காரன் இடிச்சிட்டானாம்!"

``இன்னிக்கு ராத்திரி தூக்கம் வராது இல்லையா?" குசும்பான கேள்வி.

`யாருக்குப்பா?'

``அவருக்குதான் சிவா... அடிபட்ட வலி தூங்கவிடாதில்லையா?"

``ஆமாப்பா, ஆனா நான் நல்லா தூங்கு வேன்...கண்டதையும் கற்பனை பண்ணாமல் நீங்களும் தூங்குற வழியைப் பாருங்க.!' என்றான்.

ஃ ஃ ஃ

இனியா தாலுக்கா அலுவலகத்தில் பணி புரிந்தாள். தட்டச்சு பயின்றவள். அவளுக் கும் அம்மா இல்லை. ஆனால் இவனைப் போல அவள் அம்மாவைப் பிறந்த போதே இழக்கவில்லை. இங்கே மாற்றலில் வருவதற்குச் சில நாட்கள் முன்புதான் அவளது அம்மா மாரடைப்பில் இறந்திருக்கிறாள்.

இங்கு வந்து குடியேறிய சில நாட்களிலேயே இனியா இவனது மதிப்பில் உயர்ந்தாள். நிலம்பார்த்து நடக்கிற அந்த

நளினம் இவனுக்குப் பிடிக்கும். அவர்கள் வீட்டில் ஏதாவது பலகாரம் செய்தால் தன் தங்கை வாணியிடம் கொடுத்தனுப்புவாள். ஆனால் அப்பா நிராகரித்துவிடுவார்.

அப்பா நல்ல மனிதர்தான். இந்த ஒருவிஷயத்தில் அவர் நடவடிக்கை இவனுக்குப் பிடிப்பதில்லை. என்றாலும் அவரை இவன் எதிர்த்துக் கேட்டதில்லை. எப்போதுமே அப்பாவின்மேல் இவனுக்குப் பயம் கலந்த மரியாதை. பிரசவத்தில் மனைவியைப் பறி கொடுத்த ஒருவர்,கைப்பிள்ளையை வளர்க்க எப்படியெல்லாம் துன்பங்கள் அனுபவித்திருப்பார் என்பதை இவனால் உணர முடிந்தது. உறவுக்காரர்கள் மறுமணம் செய்யச் சொல்லி எவ்வளவோ வற்புறுத்தியும், வருகிறவள் இவனை உதாசீனம் செய்து விடுவாளோ என்கிற அச்சத்தில் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்ட உத்தமர். ஆனாலும் அவர் இனியாவின் குடும்பத்தாரிடம் ஏன் இப்படி நடந்து கொள்கிறார் என்பது இவனுக்கு விளங்கவில்லை.

ஒருமுறை வியாழக்கிழமை. எப்போதாவது கோவிலுக்கு வருகிற சிவா அன்றும் குரு பகவானைத் தரிசித்துவிட்டுப் பிரகாரத்தில் தனியே உட்கார்ந்திருந்தான்.

இனியாவுக்கு என்ன வேண்டுதலோ? கொண்டைக் கடலைமாலையை குருபகவானுக்குச் சார்த்திவிட்டு, வாளியில் கொண்டு வந்திருந்த சர்க்கரைப் பொங்கலை தொண்ணையில் வைத்து எல்லோருக்கும் விநியோகம் செய்து கொண்டிருந்தாள்.

இவனிடமும் தொண்ணையைக் கொடுத்தவள், இவன்முகம் பார்த்ததும் சற்றே தயங்கினாள் ``ஸாரி'' என்று என் கையிலிருந்த தொண்ணையை எடுத்துக் கொண்டு நகர்ந்தவளைக் கைநீட்டித் தடுத்தான்.

தொண்ணையைப் பிடுங்கிப் பிச்சை கேட்பது போல அவள்முன் நீட்டினான். கண்கள் பனித்திட ஒரு கரண்டியால் சர்க்கரைப் பொங்கலை எடுத்து வைத்தாள். அவள் பார்வையில் படுகிறபடியே உடனே தின்று முடித்துவிட்டு மறுபடியும் தொண்ணையை நீட்டினான். இம்முறை பொங்கலிடும் போது



புன்னகைத்தாள். அதையும் அவசரமாய்த் தின்றுவிட்டு அவள் பின்னால் ஓடிச்சென்று மறுபடியும் தொண்ணையை நீட்டினான்.

இனியா வாய்விட்டு அழகாய்ச் சிரித்தாள் `பொங்கல் தீர்ந்திடுச்சு... இனிமேல் அடுத்த வியாழக் கிழமைதான்..!'

அடுத்த வியாழக்கிழமைக்காக அந்த வினாடியில் இருந்தே இவன் மனசு காத்திருக்கத் தொடங்கிவிட்டது. கடையைவிட்டு மனசு அவள் பின்னால் அலையத் தொடங்கிவிட்டது.

அடுத்தடுத்த வியாழக்கிழமைகளில் எத்தனைமுறை கேட்டாலும் இவனுக்குச் சர்க்கரைப் பொங்கல் கிடைத்தது. இவனுக்காகவே அதிகம்செய்து எடுத்துக் கொண்டு வருவதாய் இனியா என் காதோரம் சொன்னபோது காதிலும் இனித்தது.

இப்படியாக குருபகவான் முன்னிலையில் இவர்களின் காதல் இனிப்பாய் வளர்ந்தது. கடையில் பையனை வைத்துவிட்டு இனியாவைப் பார்க்க தாலுக்கா அலுவலகம் செல்வான். அவளைப் பார்க்காமல் ஒருநாளும் இருக்க முடியாது என்ற நிலைக்கு ஆளானான்.

உறவின்முறை திருமணம் என்று இனியா விடுப்பில் ஊருக்குப் போன ஒருநாள் அவள் நினைவிலேயே மோட்டார்சைக்கிளை ஓட்டி மணலில் சறுக்கி விழுந்தான். அதற்குமுன் அப்படி ஒருமுறைகூட விழுந்ததில்லை!

`சிவா, இதுவரை ஒரு தடவைகூட விழுந்ததில்லைன்னு பீத்திக்குவியே.... இப்போ விழுந்தது யாருடா?' அன்றும் அப்பா நக்கலாய்க் கேட்டார்.

`நானேதாம்ப்பா!'

`நீ அப்பவே விழுந்திட்டேன்னு எனக்குத் தெரியும்டா!' என்று அவர் முணுமுணுத்தாலும் அது எனக்குத் தெளிவாகக் கேட்டது.

∴ ∴ ∴

வியாழக்கிழமை.

வழக்கம் போலக் கடையில் உதவியாளனை வைத்துவிட்டு இவன் இனியாவின் தரிசனத்துக்காக குருபகவான் சன்னிதிக்கு வந்துவிட்டான்!.

இனியா வாளியோடு வந்தாள். இவன் பிரகாரத் தூணுக்கு அருகில் அமர்ந்து நாக்கைச் சப்புக் கொட்டினான். அவள் ஆட்காட்டி விரலில் கொக்குபிடித்துக் காட்டிச் சிரித்துவிட்டுப் போனாள்.

சாமி கும்பிட்டுவிட்டு வந்தவள் என்னிடம் தொண்ணையைக் கொடுத்து அது நிறையப் பொங்கலை எடுத்து வைத்தாள்.

``எனக்கு மட்டும் கொஞ்சம்தான் கொடுப்பியா!" என்றொரு பழக்கப்பட்ட குரல் தூணுக்குப் பின்னாலிருந்து வரவே திடுக்கிட்டு நிமிர்ந்த சிவா அதிர்ந்தான்..!

தொண்ணையை நீட்டியபடி அப்பா நின்றிருந்தார்!

``அப்பா, நீங்க இங்கே எப்படி?"

``நீ என்னைக் கேட்கிறியா... ஏண்டா கடையை விட்டுட்டு வந்தே?"

``மாமா, எங்களை மன்னிச்சிடுங்க!'' இனியா வெட்கத்தோடு சொன்னாள்.

``எதுக்கும்மா மன்னிப்பெல்லாம்.... உங்களுக்கே தெரியாமல் உங்க ரெண்டுபேரையும் பல வியாழக்கிழமைகளாய் நான் இந்தக் கோவிலில் பார்த்திட்டிருக்கேம்மா... சிவா தாயில்லாமல் வளர்ந்தபிள்ளை... இவனுக்கு மனைவியா வர்றவள் தாயன்பையும் தரணும்னு ஆசைப்பட்டேன்.. எல்லாவகையிலும் நீ இவனுக்கு ஏற்றவள்தான்னு புரிஞ்சுகிட்டேன்... நானும் உன் அன்பில் விழுந்திட்டேம்மா!" என்றார் அப்பா.

அவரது தொண்ணையில் உடனே இரண்டு கரண்டி பொங்கல் விழுந்தது! ■



# மகளிர் மட்டும்

## மகளிருக்கு மட்டும் தானா?

**பெண்ணியம் செல்வகுமாரி**

சமீபத்திய திரைப்படம் மகளிர் மட்டும் பெண்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்ட ஒரு திரைப்படம். இப்படம் முழுக்க பெண்களை மையமிட்டு வந்திருப்பது வெகுசிறப்பு. நான்கு பெண்கள் திரை முழுதும் நிரம்பி வழிய, அவ்வப்போது ஆண்மக்கள் கறிவேப்பிலை கொத்தாக வந்து போகிறார்கள். இப்படத்தைக் காண ஞாயிறன்றும் பெண்கள் கூட்டம் அவ்வளவாக இருக்கவில்லை என்றாலும், ஆண்மக்கள் தலைகள் எண்ணக்கூடிய அளவிற்கு இருப்பதைக் கண்டேன். ஆக பெண் பற்றிய படம் பார்க்க எந்த ஆண்மகனும் தயாராக இல்லை என்பதை உணர்ந்து கொண்டேன். அதை முன் வைத்தே இக்கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது.

ஆண்களை மையமிட்டு வரும் சினிமாக்கள்தாம் ஏராளம். அவ்வாறு பிடித்த கதாநாயகர்கள் நடித்து வெளிவரும் கூட்டம் திரையரங்குகளில் நிறைந்து வழிவதைக் கண்டிருக்கிறேன். இதில் பெண்கள் கூட்டமும் அலை மோதுவதையும் பார்க்கமுடியும். ஆண் கதாநாயகர்களுக்கு. ஒத்தாசையாக ஆபீசில் வரும் நாயகிகள் இருந்தபோதும், கதாநாயகர்களுக்காக வரும் கூட்டமே அதிகம். அதிலும் குறிப்பாக கல்லூரிப் பெண்கள் கைத்தட்டுவதும் விசில் அடிப்பதும் இயல்பான விசயமே.

மகளிர் மட்டும் பெண்விடுதலையை முழுக்கப் பேசாவிட்டாலும் பெண்ணியச் சிந்தனையை முன்வைக்கின்ற, அதை அழகியலோடு பேசுகின்ற அற்புதமான படம். பெண்ணியத்தை முன்முயற்சி யாகக் கொண்டு இப்படத்தை துணிச்சலுடன் எடுத்த இயக்குநருக்கு நன்றி சொல்லியே ஆகவேண்டும். படத்தின் வசூல் பற்றிக் கவலைப்படாமல் சமூகத்தில் புரையோடிக்கிடக்கும் ஆணாதிக்கத்தின் தன்மையை மெல்லிய கோடாக்கிக் காட்டிருக்கின்றார். இவருடைய முதல் முயற்சி பெண்ணியம் சார்ந்த சினிமாக்களை அடுத்தக் கட்டத்திற்கு நகர்த்திச் செல்லும் எனக் கருதுகிறேன்.

பள்ளி நாட்களில் தேக்கி வைக்கப்பட்ட நினைவுகளை மூன்று நாட்கள் எவ்வித இடையூறுமின்றி கொண்டாடும் பருவம் முதிர்ந்த பெண்களைப் பற்றிய கதை இது.

குடும்பம், குழந்தை, கணவன் ஆகியவற்றால் சுயம் இழந்து, தன் நிலையைத் தொலைத்து வாழும் பெண்கள் நாட்டில் ஏராளம்.

மண்ணடிமை உள்ள நாட்டில்
பெண்ணுரிமை பேசுதல் முயல் கொம்பே



என்பது உண்மைதான் என்பதற்கு இப்படமே தனிச்சான்று. காலம் தொலைத்த பெண்களின் பழைய நினைவுகளை மீட்டுருவாக்கம் செய்கிறாள் புதுமைப் பெண். அவள் முற்போக்கு சிந்தனை கொண்ட பெண்ணியவாதி. பள்ளி நாட்களில் இணைபிரியா தோழிகளாக, கூடி தவறு செய்தபோதும் ஒருஒருக்கொருவர் காட்டிக்கொடுக்காமல், தண்டனை பெற்றும் இணைந்தே வாழத் துடித்த பிஞ்சு உள்ளங்கள் காலச்சக்கரத்தில் மாட்டி பஞ் சாய் போயின. காலம் மேலும் அவர்களை வெவ்வேறு திசையில் வழியனுப்பி வைத்து யார் யாருக்கோ வாழ்க்கைப்பட வைத்தது. அவரவர் வாழ்க்கையை அவரவர் விருப்பதிற்கு வாழமுடியாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் நடுத்தர வயது பெண்களின் நிராசையை, ஏக்கத்தை நிறைவு செய்ய துணிபவர் கதாநாயகி ஜோதிகா.

இவர் முற்போக்கு எண்ணம் கொண்டவராக வாழ்க்கையை மிக எளிதாகப் புரிந்துக் கொண்டவராக சித்தரித்திருப்பது மிகச் சிறப்பு.

இப்படத்தை இயக்கிய பிரம்மாவுக்கு ஒரு வீரவணக்கம். இப்படம் வணிகரீதியாக வெற்றியடையவில்லை என்றாலும் மிகப் பெரிய வெற்றிப் படம் இதுவே என்பதற்கு சில காரணிகள் உண்டு. ஆண்களை மையமிட்டு வரும் திரைப்படங்களுக்கு நடுவே, எவ்வித எதிர்ப்பார்ப்புமின்றி பெண்களை மையமிட்டு தமிழுலகிற்கு வந்திருக்கும் முதல் பெண்ணியப்படம். இப்படம் பார்க்க வருபவர் கூட்டம் அரங்கம் நிறையவில்லை என்றாலும் இதுதான் அதனுடைய வெற்றி. ஏனெனில் ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்ணுக்கான இடம் வெற றிடம் என்பதை இந்தத் திரையரங்கு வெளிச்சமிட்டுக் காட்டி யுள்ளது.

ஆண்கள் இவ்வரங்கிற்கு வரவில்லை என்பதிலிருந்து பெண் குறித்த படத்தைப் பார்க்கஎந்த ஆணும் அபிப்ராயப்படவில்லை எனபதுதானே பொருள். பெண்ணை வைத்து என்ன படம் எடுத்திருப்பார்கள் என ஏளனமாக நினைக்கும் ஆண் சமூக மனம்.. மேலும் ஆண்களைச்சார்ந்த வெளியுல வாழ்க்கை பெண்ணுக்குக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் உறுதி செய்கிறது..

உண்மையில் பெண்கள் உரிமையை, உணர்வை, பக்குவப்பட்ட சிந்தனைகளை ஆழமாக, நுட்பமாக சொல்லவில்லை என்றாலும் கூட ஆண் அதிகாரத்தை மையத்தைக் கேள்விக்குட்படுத்தும் இது போன்ற பல படங்கள் வெளிவந்து இத்தமிழ் சமூகத்திற்கு பெண் பற்றிய புரிதலை உருவாக்கவேண்டும். குழந்தைகள், இளைஞர்கள், குடும்பத்திலுள்ளோர் அத்தனைபேரும் பார்த்து உணர வேண்டிய சிறப்பு மிக்க படம் இதுவே.



# பிறந்தது கவிதை !

கவிமணி நுட்பம் **பாயிஸா நௌபல்**

## ஆச்சரியம்! ஆனால் உண்மை!!

எனது ஊரில் என் தோழி சில வருடங்களாக ஒரு மைனாவை வளர்த்து வந்தாள். அதற்கு உணவாக காய்ந்த இறைச்சியை தேனில் இட்டு ஊற வைத்துக் கொடுப்பாள்!!

அவள் வீட்டில் சிறு குழந்தைகள் இரண்டு காலப் போக்கில் குழந்தைகள் போல் இதுவும் தமிழ் பேச கற்றுக் கொண்டது. அத்தோடு தாய் இல்லாத என் தோழிக்கு இது சிறு உதவிகளும் செய்து வந்தது!!

யாராவது வீடு வந்தால் அவர்களை “உள்ளே வாங்கள்!” என்று அழைப்பதும், வந்தவர்களை என் தோழியிடம் சென்று அறிமுகப் படுத்துவதும்.. என்ன பேசுகிறார் கள் என்று கூடவே இருந்து பார்த்து மகிழ்வதும், என் தோழி குழந்தைகளை குளிப்பாட்டினால் சிறு ஆடைகளை கொண்டு வந்து கொடுப்பதும், முடிந்தளவு அதனால் தூக்க இயன்ற பொருட்களை தூக்கி கொண்டு கொடுப்பதும் போன்ற இத்தனை உதவிகளையும் செய்வது மைனாவின் பணி.

ஆனால் இவர் கணவர் சந்தைக்குப் போக வெளியே வந்தால் உடனே அவர் தோளில் “வாப்பா நானும்..” என்று அமர்ந்து கொள்ளும். சில நேரம் அவ்வாறே அழைத்துச் செல்வார்! சில நேரம்.. “நீ பறந்து வா..! என்று சொல்லி விட்டு அவர் போக.. அவர் போகும் பாதையில் இந்த மைனா தானே பறந்து செல்லும்.

இந்தக் காலப் பகுதியில் ஒரு நாள் மழை நேரம் மைனாவை திருடன் ஒருவன் திருடிக் கொண்டு போய் விட்டான்.

இவர் காலை எழுந்து பார்த்ததும் மைனா இல்லை. இவர் ரொம்ப மனம் வேதனைப் பட்டு அழுததால் என்னிடம் நான் ஆறுதல் படுத்தினேன்..!!” கிடைக்கும்! கவலை வேண்டாம்..!!” என்று.

ஏன் என்றால் அது ஒரு நாளைக்கு

# வாழ்க்கை...

என்னை விட்டு கடந்த
அந்த இனிமையான
நாட்களை மீட்டுப் பார்க்கின்றேன்
எண்ணங்கள் நிறைந்த
வாழ்க்கையில்
நேரங்கள் வேகமாய் ஓடி
காலங்கள் கரைந்துதான் போகிறது.
தோல்விகள் அதிகம்
தோல்விகளும்
வெற்றி எனும் பாதைக்கு
படிகட்டுகள்தான்.

கவலைப்படாதே...
பூக்கும் பூக்கள் அத்தனையும்
கனியாவதில்லை
எண்ணங்கள் அனைத்தும்
வாழ்வாய் மாறுவதில்லை
உயிரினங்கள் அனைத்திற்கும்
இறைவன் வகுத்தப் பாதை
வாழ்க்கையின் அது ஒரு வட்டாரம்!
பாச மழைப் பொழிந்து
அரவணைத்து அன்பு காட்டி
துணை வந்த வாழ்க்கைப் பயணம்
வொற்றி தோல்வி கலந்து
கடைசியில் முடிவாய் மரணம்!

இனிமையான மனதில்
இருக்கும் கடந்த கால வாழ்க்கை
நினைக்கையில் கன்னங்களின்
ஓரம் கண்ணீர் துளிகள் வழிய
தொலைத்து விட்ட அந்த
நாட்களை என் வாழ்க்கையில்
மீட்டுப் பார்க்கின்றேன்.
காலங்கள் ஓட நானும்
முதுமையானேன்.

சாதிக்க துடித்து சடுதியில்
போகும் இவ் வாழ்வில்
எதை கொண்டு செல்வோம்?

நாம் கற்றுக் கொள்ளும்
வாழ்க்கை இதுவோ?

**– ஒலுவில் ஆதிக்**

பல தடவை அவள் பெயரை சொல்லி அழைக்கும்! ரொம்ப சத்தமாக அது, அதே போல் ஓர் இடத்தில் அழுது கொண்டு இருக்கிறதாக தகவல் வந்தது. உடனே அங்கே போய் கேட்டதும் திருடியவர்கள் கொடுக்க மறுத்தனர். உடனே வேறு வழி இன்றி போலீஸில் முறையிட்டாள்!!

சட்டப்படி மைனா காவல் நிலையம் வந்தது! வந்தும் பயன் தரவில்லை. இருவருமே தன் மைனா என்றே அடமும் பிடிவாதமும் பிடித்ததால்.. நியாயமும், நீதியும் தடுமாறியது!! இரண்டு நாட்களுக்கு பின், இருவரும் நீங்கள் உங்கள் வீடுகளுக்கே சென்று விடுங்கள். நாங்கள் மைனாவைக் கூட்டில் இருந்து திறந்து விட்டு விடுவோம்.! அதற்கு தெ தன்னை உண்மையாக வளர்த்தது யார் என்று தெரியுமாததால் தானே வீடு வந்தால் பெற்றுக் கொள்ளுங்கள், என்று சொல்லி அனுப்பி விட்டனர் போலீஸ் ஸ்டேசனில்.

உடனே எனது தோழி கணவர் “சரி சேர்! அது போதும்! நான் வீடு போகிறேன்..!” என்று சொல்லி பைக்கை தள்ளும் நேரமும் கூடு நிறக்கப் படும் நேரமும் ஒன்றானதால் வாப்பா நானும் என்று வந்து தலையில் உட்கார்ந்ததாம் மைனா.

ஆம்! அப்படி அருமையாக எங்களுடன் ஒரு பாசப்பறவையாக.. அன்புப் பிள்ளை யாகவே வளர்ந்து வாழ்ந்து வந்த எங்கள் அழகு மைனா இரு தினங்களுக்கு முன் வயது போய் இறந்து விட்டது..!! என்று கூறி என் தோழி என்னிடம் கதறலுடன் சொல்லும் போது அவளை அணைத்து ஆறுதல் சொல்லத்தான் என்னால் முடிந்தது. இறந்த மைனாவை மனதில் நினைத்து வியந்து மகிழ்ந்தபடியே..!! பிறந்தது கவிதை!

**யார் கற்றுக்கொடுத்தது**
**தமிழ் அழகாக பேசுகிறது**
**மைனா!**

மறைப்பதற்கு எதுவுமில்லை
மகிழ்ச்சியை அள்ளித் தருகிறது
குடிசை வீடு....

கரங்களை நீட்டும்பொழுது
மெல்ல உயர்ந்து வருகிறது
ஏழையின் பசி....

படித்தவர்கள் குடும்பம்
பெருமையுடன் வாழ்ந்தார்கள்
திண்ணைக் கல்வி...

உயிர் காத்த மரங்கள் இறக்கை
முளைத்ததும் விட்டுச் செல்கிறது
முதியோர் இல்லம்...

நாள்தோறும் கதிரவன் வரவு
இருள் மூழ்கிக் கிடக்கிறது
ஏழையின் வீடு...

மரங்களின் கிளைகள் பிடியில்
ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறது
சிறுவயது நினைவுகள்....

தகுதிக்கு மீறிய ஆசைகள்
பயணிக்க வைக்கிறது
மரணம்....

நன்கொடை இல்லை
கல்வித்தரம் உயர்ந்திருந்தது
திண்ணைக் கல்வி...

வானுயர்ந்த கோவில்
அருகாமையில் தெரிகிறது
பருந்துகள் கூட்டம்...

பூக்களைப் பறித்ததும்
கரங்களை உதற வைக்கின்றன
தேனீக்கள்...

மரணப் படுக்கை
கண்களில் தெரிந்தது
அன்னையின் உயிர்...

பெண்மையின் சிறப்பு
வீடெங்கும் தவழ்கிறது
குடும்ப மகிழ்ச்சி..

இழவு வீடு
உறவுகள் கையில் திணிக்கிறது
கடன்களின் குறிப்பு...



**கரு. சரண் குமார்**

திருமணவயல், தேவகோட்டை

# காகிதம் பதிப்பகம் கண்மணி வாழி !



தமிழ்நெஞ்சம்

## அஞ்சலி



ஆயுதப்பு ரட்சியெலாம் அன்றும் இன்றும்
அகிலத்தில் மாற்றங்கள் செய்ய வில்லை,
காகிதப்பு ரட்சியால்தான் கணக்கிலா மாற்றம்
காண்கின்றோம் கண்கூடாய் குருதி யின்றி,
ஓய்வறியா உழைப்பாளி காகிதம் மனோவோ
உழைத்தபடி உயிர்விட்டார் என்றால் உண்மை
வாய்ப்பேச தான்முடியும் வாய்ப்போ இல்லை
வலுவிழந்த உறுப்புகளால் வலிந்து செய்ய.

மரபணுவின் கோளாறால் மாற்றம் வந்து
மனோபாரதி உடலுக்கோ மருந்து மின்றி
உறவென்றி ருக்கின்ற உறுப்புக ளெல்லாம்
உணர்வற்றுப் போனதாலே உறக்க மில்லை,
சிரமங்கள் பலவந்து பந்தி வைக்க
சீக்கிரமே நோயுற்று சிந்தை நொந்தார்,
வரவிருக்கும் நாட்களையெலாம் வாழ்ந்து தீர
வறுமையுடன் போராடி வாழ லானார்.

ஊனமுற்றார் உடலாலே என்று நாடு
உணர்த்துகின்ற போதினிலும் மனதில் என்றும்
ஊனமில்லா உழைப்பாளி அவர்போல் யாரும்
உலகத்தில் இலையென்று சொல்வோம் நாமே!
மானமிகு மனோபாரதி மறைய வில்லை
மகத்தான நூல்கள்வழி வாழு கின்றார்,
கானக்குயில் பாட்டாக அவரின் வாக்கு
காற்றோடு கலந்தபடி மூச்சால் பேசும்.

மாதங்கள் மூன்றினிலே மகிழத் தக்க
மகத்தான இருநூறு புத்த கங்கள்,
தோதாக முடித்துவிட்டு துயிலும் நீந்து
துணையான நட்புக்குத் துயரம் ஈந்தார்,
சேதாரம் அவருடலில் சிரமம் தந்தும்
சிறிதளவும் காட்டாது சினமும் கொள்ளார்,
ஆதாரம் இவர்வாழ்வை அகிலம் ஏற்கும்
அன்பர்நாம் கரங்குவிப்போம் நூலாய் வாழ்க!